
செந்தமிழ்ச் செ
திங்கள் வெளியீ
பிரதி விலை அணா 4
ரூ. 2—8

199650

ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு


| சிலம்பு க௫ | பவ ஆண்டு ஆவணித் திங்கள்<br>1934ஆம் ஆகஸ்டு — செப்டம்பர் | பரல் க |
|---|---|---|



## செந்தமிழ்ச் செல்வி

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

## (Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. ,, குடிசைக்கிழார் சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், திருவாரூர்.

5. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட்சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர், அரியலூர்.

10. ,, காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

159 65

## பொருளடக்கம்


திருவந்தலூர் கோயில்

செல்வியின் பதின்மூன்றுவ தாண்டு
காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி.ஏ.

திருவாசக உரை மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. ௩

திருச்செங்கோடு
C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், பி. ஏ., பி. எல். ௯

சேது கா. சிவ. க. ௧௩

இந்தியாவும் சாவகவும் S. நடராஜ பிள்ளை, பி.ஏ. ௧௬

செந்தமிழொலி இலக்கணம்
பா. வே. மாணிக்க நாயக்கர், பி. இ. ௧௮

குறுந்தொகை இரா. சிவ. சாம்பசிவன் ௨௫

உளநூல் மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ. ௩௰

கார்நாற்பது—ஆங்கில மொழிபெயர்ப்பு
T. B. கிருஷ்ணசாமி முதலியார், M.A., B.L. ௩௩

மத்த விலாசம் தி. கி. கு. நாராயணசாமி நாயுடு ௩௭

இத்தாலிய தேயப்பழங்குடிகள் த. இராமநாத பிள்ளை, B.A. ௪௧

திருஞான சம்பந்தர் நாமாவளி
மணி. திருநாவுக்கரசு முதலியார் ௪௬

மிளகு காசிகன் ௪௭

செய்திகளும் குறிப்புக்களும் ௪௮

இணைப்புகள்:—

தமிழ்த் தோற்றத் தேற்றம் T. S. கணேசபிள்ளை

வாளெழுபது உரையுடன் தன்மபுத்திரன்


---

### செல்விப் பைண்டுத் தொகுதிகள்

| | | | |
|---|---|---|---|
| 1 முதல் 4 தொகுதிகள் தனித்தனி | விலை | ரூ. 3 | 8 |
| 5 முதல் 8 ,, | ,, விலை | ரூ. 4 | 8 |
| 9, 10, 12 ,, | ,, விலை | ரூ. 3 | 8 |
| 11வது தொகுதி | விலை | ரூ. 2 | 0 |

1 முதல் 9 தொகுதிகளும், 12-வது தொகுதியும் ஒரு சேர வாங்குவோர்க்கு 100-க்கு 50 விதம் கமிஷனும் தனித் தனியே வாங்குவோர்க்கு $33\frac{1}{3}$ கமிஷனும் கொடுக்கப்படும்.

---


சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.


OFFICE OF ... 1-OCT 1934 MADRAS

ஓம்
திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி


திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௧௩ | மெய்கண்டான் யாண்டு-௭௧௧ ஆவணித்திங்கள் 1934௵ ஆகஸ்டு௴—செப்டம்பர்௴ | பரல் ௧


## நஞ்செல்வியின் பதின்மூன்றுவதாண்டு

நம் அருமைச் செல்வி தோன்றிப் பன்னீராண்டுகள் கழிந்து பதின்மூன்றுவது ஆண்டு தொடங்கலுற்றது. பேதைப்பருவமும் பெதும்பைப் பருவமுங் கடந்து மங்கைப் பருவ மெய்தலுற்றுள் நஞ் செல்வி. இறைவனின்னருளினாலும், தமிழ் மக்களின் அன்பு கனிந்த பேருதவியினாலும் இந்நல் லிளமங்கை சீருடனும் சிறப்புடனும் பொலிவுற்றுத் திகழ்வாள் என்பது உறுதி.

ஆ! இப் பன்னீரியாண்டுகளில் எத்துணை மாறுதல்கள்! காலம் கறங்குபோற் சுழல்வதென்று கூறுவர். அவ்வாறு அஃது சுழலும் விரைவிலும் மிக்கதோர் விரைவுடனன்றோ உலகத்திடை மாறுதல்கள் நிகழ்கின்றன!

உலகத்தின் ஒரு பகுதியாகிய நந்தமிழ் நாட்டிடை நேர்ந்துள்ள மாறுதல்களை மட்டும் மேற்போக்காக நோக்கினும் திகைப்பினை விளையாவோ? பொன்னனைய காவிரியின் நன்னீர் நாடெங்கும் விளக்காக எரியத் தொடங்கியுள்ளது. உலகத்திலேயே பெரிய அணை என்று மதிக்கப்படும் மேட்டூர் அணை ஓங்கி உருப்பெற்றது. கைவிடப்பட்டிருந்த பல துறைமுகங்கள் திறக்கப்பட்டு வாணிபத்திற்கு வசதி யளிக்கின்றன. மலைநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் நேரான இருப்புப் பாதைப் போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. உந்து வண்டிகள் உள்நாட்டுச் சிற்றூர்களையெல்லாம் ஒன்றுடனொன்று பிணைக்கின்றன. கடிதங்கள் காற்றில் (வான ஊர்திகளின் மூலம்) பறந்து குறித்த இடஞ் சேர்வவாயின. தொலைவாணி (டெலிபோன்) யின் முழக்கம் பெரு

முழக்கமாக இருக்கிறது. இன்னும் இவைபோன்ற எண்ணற்ற மாறுதல்கள் பருப்பொருள்கள்மாட்டு எத்துணையோ நிகழ்ந்துள்ளன.

இனி, தமிழ் நாட்டார்தம் நினைவுலகில், கருத்துப்போக்கில், எத்துணை மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன! ஐயத்தின் பாற்படாதிருந்த ஐயன் அதன் வாய்ப்பட்டு அலைவுற்று நிலை கொள்ளானாயினன். புராணங்களெல்லாம் புனைகதைகளாக வெறுத்தொதுக்கப்பட்டு நாளடைவில் அவைகள்மாட்டும் பல உண்மைகள் காணக்கிடக்கின்றன என்ற உண்மை ஒப்புக் கொள்ளப் படுமாறாயிற்று. விந்தையும் விநோதமும் நிறைந்த நகைச் சுவைத்தாள்கள் பல மலிந்து தோற்றமுற்றன. கன்னித் தமிழின் தூய்மை நலனும் பெருவளனும் சிதைந்து படுமோ எனத் தமிழ் நாட்டார் பெருங் கவலுற்றுக் கலங்குமாறு பல தாக்குதல்கள் பற்பல சாரிருந்து மிக்கெழுந் தடங்கலாயின. வடமொழியும் ஆங்கிலமும் தமிழை உருச் சிதைத்தமை போதாதென்று இந்தியென்ற புது மொழியொன்றும் உடன் சேர்வதாயிற்று. “நான் சைவன்” “நான் வைணவன்” “நான் மகம்மதியன்” என்பன போன்று ஒருவன் துணிந்து கூறித் தன் மதநாட்டிப் பிறமதம் பழித்த காலம் மலையேறிவிட்டது. எம்மதமும் சம்மதமே எம் மதமும் அம் மதமே என்று கூறி ஒவ்வொருவனும் பொதுநலம் பாராட்டுங் காலமாயிற்று. உடப்பாரழியின் உயிராரழிவர் என்ற கொள்கை மிகப்பரந்து உடற்பயிற்சி திடமுறலாயிற்று. “பெண்ணே பேயோ” என்று பழித் தொதுக்கும் இழிமுறை மறைந்து பெண்டிர்சமநிலை பெறுதற் குரியாராக மீண்டுங் கருதப் படுவாராயினர். ஆராய்ச்சியும் அறிவியலும் எத்துறையிலும் பரந்து துருவி யாராய்வவாயின.

இத்தகைய மாறுதல்களா லெல்லாம் மோதுற்றும் பிறபோக்கென்ற பாறையின் மீது தாக்கிச் சிதைவுறாது முன்னேறுவதன்றோ உயரிய ஒவ்வொரு வெளியீட்டின் இலக்காகும்? அதற்கேற்ப கொண்ட இலக்கு பிழையாமல் தமிழ் மொழிக்கும், கலைக்கும் அரணளித்து நஞ் செல்வி இதுகாறும் உழைத்து வந்துள்ளது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். தமிழன்பர்களின் கண்ணோட்டமே பற்றுக் கோடாகக் கொண்டு இனியும் அவ்வாறே உழைத்துவரும் என்று உறுதி கூறுவோம்.

இனி, தான் மங்கைப்பருவம் எய்தியதற் கறிகுறியாக நஞ் செல்வி இவ்வாண்டு முதல் புதியதோர் மேலாடை புனைந்து வெளிவருவாள்; அறிவியற் பகுதி, ஆராய்ச்சிப் பகுதி, இலக்கியப் பகுதி, சமயப் பகுதி, மாணவர் பகுதி, மாதர் பகுதி, உடல்நலப் பகுதி, புதுக்கவிப் பகுதி என்பன போன்ற பல அணிகளை



யணிந்து விளங்குவாள்; தமிழ்நாட்டில் உரைநடை யெழுதுவதிற் சிறந்தோரெனக் கருதப்பட்டுவரும் பல அறிஞர்களின் கையுறைகளையும் ஏற்றுப் போதருவாள். சுருங்கக் கூறின் தமிழ்மக்கள் முன்னேற்றத்திற்கும், தமிழ்க்கலையின் வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் தனிப் பெருமைக்கும் ஏற்றவாறு உழைத்துப் பணியாற்றுவதே கடனாகக் கொண்டு திகழ்வாள் நஞ் செல்வமங்கை. பொதுநலங் கருதித் தொண்டாற்றப்புகும் இம்மங்கையை எல்லோரும் ஏற்றுப் போற்றவேண்டு மென்ற கருத்துடனேயே ஆண்டுக் கட்டணத்தை மூன்று ரூபாவிலிருந்து இரண்டரை ரூபாவாகக் குறைத்துள்ளோம். ஏற்றுப் புரந்தருதல் எம்மனோர்கடன்.

---

# திருவாசகம்

## திருக்கோத்தும்பி

நானோரென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
ஊனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

பதவுரை:—

வானோர்பிரான்—தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான்

*மதிமயங்கி (யிருந்த) என்னை—(உலக நுகர்வுகளிற் பற்று வைத்துத் தன்னை மறந்து) மயக்க அறிவு அடைந்திருந்த என்னை

ஆண்டிலனேல்—(திருப்பெருந்துறையில் இப்பொழுது எனக்கு உண்மை உணர்த்தி) என்னைத் தனது மீளா அடிமையாகக் கொண்டு ஆண்டருள் செய்யாவிட்டால்

நான்ஆர்—நான் என்பது உலக இன்பம் நுகர்தற்குக் கருவியாக வேண்டப்படும் தத்துவக்கூட்டமும் அத்தத்துவக் கூட்டத்தாலாகிய உடலும் அல்லாது அவ்வுடலில் உள்ளும் புறமும் விளங்கி அதனை இயக்கித் தத்துவங்களை எல்லாம் அறிந்து வருகின்ற உயிர் என்று என்னால் எவ்வாறு உணரமுடியும்?

என்னை அறிவார்ஆர்—நான் அவ்வாறு இயங்கி அறிவதும் சிவபெருமான் தத்துவங்களை இயக்கியும் என்னுள் நின்று இயங்கியும் அறிவித்தும் அறிந்தும் வந்தால் அல்லாமல் எனக்கு நேரே

* “மதிமயங்கி என்பதைப் பெயர்ச்சொல்லாக்கொண்டு ஆறும் வேற்றுமையுருபு விரித்து மதிமயக்கமுற்ற பிரமனது தலையோட்டிற் பலிதேரும் அம்பலவன் என முடிக்க”. —பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்.
(கலைபயில் கட்டுரைகள்—பக். 1

இயல்வதன்று என்ற எனது தன்வயமற்ற தன்மையை என்னால் எவ்வாறு உணரமுடியும்?

எனது உள்ளம்ஆர்—சிவபெருமான் அவ்வாறு தத்துவங்களை இயக்கியும் எனக்கு அறிவித்தும் அறிந்தும் செய்துவந்தது, காமம், வெகுளி, மயக்கங்களின் வயப்பட்டு ஐம்புலன்களைச் சேர்ந்து உலக இன்பம் நுகர்தற்கு ஒழிவின்றிச் சங்கற்ப விகற்பங்களைச் செய்துவந்த எனது உள்ளத்தில் வைத்து என்பது அல்லாது காமம், வெகுளி, மயக்கங்களி லிருந்து முற்றிலும் நீங்கி, பசுகரணம் நீங்கிய சிவகரண மடைந்து சுத்தமாயா சாந்தியாதீதகலையில் உன்மனா கலைவரை விளங்கிச் சிவபெருமானையே நினைத்துக் கொண்டிருக்கும் எனது உள்ளத்தில் வைத்து என்பதை நான் எவ்வாறு உணரமுடியும்?

ஞானங்கள்ஆர்—அவ்வாறு எனது உள்ளம் பசுகரணம் நீங்கிய சிவகரணம் அடைந்து சிவமாந்தன்மை எய்தியதும், சிவமாந்தன்மை எய்திய அவ்வுள்ளத்தில் சிவபெருமான் தனது எண் குணங்களையும் பதிவித்து, தீவிர சத்திநிபாதம் அடைவித்து, பேரின்பம் நுகரச் செய்ததும் சரியை, கிரியை, ஞானம், யோகம் என்ற படி முறையில் முறையே அவ்வுள்ளத்தில் உறைத்து விளங்கச் செய்த கேட்டல் ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டை ஞானம் என்ற நால்வகை அநுபூதி ஞானங்களால் என்று என்னால் எவ்வாறு உணரமுடியும்?

கோத்தும்பீ—(இவ்வாறு இறைவன் உலக நுகர்வில் உழன்றுகொண்டிருந்த என்னை நிலையாயுள்ள தெவிட்டாத பேரின்பத்தை நுகருமபடி செய்ததனால்) ஏ, அரச வண்டே

ஊன் ஆர் உடைதலையில்—ஊன் நிறைந்துள்ள நான்முகனுடைய தலையிலிருந்து உடைபட்ட மண்டை யோட்டில்.

உண்பலிதேர் அம்பலவன்—தான் உண்ணும் பிச்சைச் சோற்றை மனைகடோறும் சென்று கொள்கின்ற கூத்தப் பெருமானுடைய

தேன்ஆர் கமலமே—தேன் போன்று பேரின்பம் நிறைந்துள்ள தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளிடத்தில் மட்டும்

சென்று ஊதாய்—சென்று ஊதுவாயாக.

நீ அவ்வாறு ஊதினால் நிறைந்த தெவிட்டாத இன்பம் பெறுவாய் என்பது குறிப்பெச்சம்.

## விளக்கவுரை:—

இந்தப் பாட்டில் கோத்தும்பி என்பது உருவகமாய் உள்ளத்தைக் குறிக்கிறது. பின் இரண்டு அடிகளும் உள்ளத்தைப் பார்த்துக் கூறும் அறிவுரை. முதல் இரண்டு அடிகளும் அவ்வறிவுரை கூறுதற்குக் காரணமாகிய அடிகளுடைய அனுபவ உறைப்பு ஞானம் (நேரே



கண்டுணர்ந்த மெய்யறிவு). இந்த அறிவு உரை உலகில் சிற்றின்பத்தில் உழன்று வருந்துகின்ற மாந்தரெல்லாருக்கும் பொருந்தும்.

மதிமயங்கி—மதி - அறிவு. பேரின்பம் இன்னதென அறியாது உலக இன்பத்தை மெய் என்று அறியும் அறிவு, இங்கே மயக்க அறிவு என்று கூறப்பட்டது. மதிமயங்கி என்ற சொற்றொடருக்குப் பின் அவாய்நிலையால் தொக்கி நின்ற 'இருந்த' என்ற சொல்லை வருவித்து விரித்துப் பொருள் கூறப்பட்டது.

வானோர்பிரான்—என்றதனால் "யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்—யாவர்க்குங் கீழாம் அடியேனை," என்பது குறிப்பிடப் பட்டது.

என்னை ஆண்டிலனேல்—இறைவனுக்கும் உயிருக்கும் எப்பொழுதும் உளதாகிய ஆண்டான் அடிமைத் தொடர்பு கூறப்பட்டது. இத் தொடர்பு என்றும் உளதாயினும் அதனை உயிர் தனக்கு மெய்யுணர்வு பிறக்கும்பொழுது அறியத் தொடங்குகின்றது. உயிரினுடைய மெய்யுணர்வு அளவில் இறைவனும் அதனை ஆண்டருள் செய்து மெய்யுணர்வு முற்றியபொழுது அதற்கு மேலான பேரின்பத்தை அருள் செய்கின்றான்.

நான்ஆர்—மெய்யுணர்வு பிறக்குமுன் உடலினையே உயிர் என்று நினைந்த தமது நிலையையும் சிவபெருமான் தம்மை ஆண்டருளின பின் தம்மை உள்ளபடி அறிந்த நிலையையும் ஒப்பிட்டு வியப்படைந்து அடிகள் நான் யார் என்று கூறி அருளினர். நான் யார் அதாவது நான் யாராயிருப்பேன்? இப்பொழுது உணர்கிற நிலையிலுள்ள 'நான்' ஆயிருப்பேனா? சிவமாகிய தலைவனை ஒழிய வேறு 'நான்' என்றொரு தலைவனில்லை என்ற இந்த 'நான்' நிலையை சிவபெருமான் என்னை ஆண்டருளிய பின்புதான் அவனோடு இரண்டறக் கலந்து நின்று உணர்ந்தேன் என்பது கருத்து.

என்னை யார் அறிவார்—இதனால் அடிகள் உயிர் எப்பொழுதும் இறைவனைச் சார்ந்து ஒழுகும் தன்வயமில்லாத தன்மையைக் கூறுகின்றார். உயிர் தன்னை உடல் அல்ல என்று அறிந்தபின் அறியும் அடுத்த நிலை இது ஆதலால் இதனை நான் யார் என்பதற்குப் பின் வைத்துப் பொருள் உரைக்கப்பட்டது. உயிரானது தனது தன்வயமற்ற நிலையை அறிந்தபொழுது அக்குறையை நீக்க, குறைவிலா நிறைவுடைய இறைவனைச் சாரமுயன்று வீட்டு நெறியைச் சேர்கின்றது. இறைவனும் நற்பயன் விளைத்தற் பொருட்டு குறையுடைய உயிர்களுக்கு அருள் செய்கின்றான். "குறையுடையார் குறைதீர்ப்பார்", (203-7) என்றும், "குறையுடையார்க் கல்லால் களைகிலார் குற்றமே', (284-4) என்றும், திருஞான சம்பந்த அடிகள் தேவாரத்திற் கூறி யருளினர். அடிகள் தம்மை ஆண்டு அறிவித்ததற்கு முன் அகங்காரத்தால் தாமாகவே எவற்றையும் அறிந்ததாக நினைந்ததைக் குறிப்பிட்டும் இப்பொழுது சிவபெருமானுக்குள் அடங்கி நிறைவான

தன்மை அடைந்து எல்லாம் உணர்வதைக் குறிப்பிட்டும் என்னை ஆர் அறியவல்லார் என்றார். உயிர் தனது தலைவனாகிய சிவபெருமானை அறிதற்குத் தன்னை அறிதல் இன்றியமையாதது.

எனது உள்ளம் ஆர்—யார் என்பது ஆர் என மருவி வந்தது. உயர்திணையி லன்றி அஃறிணை வினைப் பெயர்க் கண்ணும் ஆர் வருதல் புதியன புகுதல் என நன்னூல் விருத்தி யுரை ஆசிரியர், **சங்கர நமச்சிவாயப் புலவர்** கூறி யிருத்தல் காண்க. சிவபெருமான் உயிரினை ஆண்டு அறிவித்ததற்கு முன் உள்ளமானது உயிரினது அகக் கருவியாக அகங்காரத்தினால் உலக நுகர்வுப் பொருள்களைப் பற்றிச் சங்கற்ப விகற்பங்கள் செய்து ஐம்புலன்களுடன் சேர்ந்து உலக நுகர்வுகளில் ஈடுபட் டிருந்தது. சிவபெருமான் உயிரினை ஆண் டறிவித்த பின் உள்ளம் ஐம்புலன்களுடன் சேர்ந்து உலக நுகர்வுப் பொருள்களை நோக்குத லின்றி இறைவனையே நோக்குகின்றது. அப்பொழுது அது பஞ்சக் கிலேசங்களிலிருந்து முற்றிலும் விடுதலை யடைந்து வேட்கை அறிவு செயல்கள் திருந்தி அருளொளி விளங்கப் பெற்று சுத்த மாயா சாந்தி யாதீத கலையில் "அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தை (உள்ளம்) யேயாக" என்று **சேக்கிழார்** அடிகள் கூறியபடி இறைவனையே சிந்தித்திருக்கின்றது. இந் நிலையில் உள்ளம் (சிந்தை) சிவத்தினின்றும் வேறல்ல என்று தமிழ் மறை நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு உயிர் உலக இன்பம் நுகர்தற்கும் சிவபெருமான் அதனை ஆண் டறிவித்த பின் உலகில் சிவ போகமாகிய பேரின்பம் நுகர்தற்கும் உள்ளமே கருவியா யிருத்தலின் அடிகள் 'எனது உள்ளம் யார்' என்றார். இறைவன் ஆண் டருளவில்லையானால் உள்ளமானது பேரின்பம் நுகர்தற்குத் தக்க நிலையை அடையமாட்டாது என்பது கருத்து. உயிர் சிவபெருமானைக் கண்டு பேரின்பம் அடைதலுக்கு உள்ளமே கருவியா யிருக்கிறது என்பதைத் **திருநாவுக்கரசு** அடிகள் உள்ளத் திருக் குறுந்தொகைத் தேவாரப் பதிகப் பாட்டுக்களில் 'ஊறலைக் கண்டுகொண்ட தெனுள்ளமே' என்றும், 'எந்தையைக் கண்டு கொண்ட தெனுள்ளமே' என்றும், 'கள்ளத்தைக் கழிய மனமொன்றி நின்னுள்ளத்தி லொளியைக் கண்ட துள்ளமே' என்றும், 'என்னெஞ்சி லீசனைக் கண்ட துள்ளமே' என்றும், 'சிந்தையுட் சிவனாய் நின்ற உருவினைக் கண்டு கொண்ட தெனுள்ளமே' என்றும் கூறி யருளினமை காண்க. **திருமந்திரம்** 1201-வது பாட்டில் 'சிந்தையில் வைத்துச் சமாதி செய்வீரே' என்று கூறப் பட் டிருத்தல் காண்க.

ஞானங்கள் ஆர்—ஞானங்கள் என்று இங்கே கூறப்படுவன வீட்டு நெறியில் சரியை (சேர்தல்) கிரியை (செயல்) யோகம் (கூடுதல்) ஞானம் (அடைதல்) என்னும் நான்கு படிமுறை நிலைகளிலும் முறையே அடையத் தக்க கேட்டல் ஞானம், சிந்தித்தல் ஞானம், தெளிதல் ஞானம், நிட்டை ஞானம் என்ற நால் வகை அநுபூதி ஞானங்கள். உள்ளமானது சிவமாஞ் செம்மைத் தன்மை அடைதற்கு இந்த நான்கு ஞானங்களும் ஏதுக்களா யிருத்தலின் அடிகள் எனது உள்ளம் யார் என்று கூறிய பின் ஞானங்க ளார் என்று கூறி யருளினார்.



கோத்தும்பீ—தும்பி என்ற விளிப்பெயர் ஈற்றில் இகரம் நீண்டு வந்தது (நன்னூல் 305-வது சூத்திரம்). உருவகப் பொருளாகிய உள்ளமானது (மனம்) சிவபெருமானுக்கு ஆட்பட்டு அடங்கி யிருத்தலே ஆண்மை என்று குறிப்பிப்பார் தும்பி என்று கூறாது கோத்தும்பி என்றார்.

உண்பலி தேர் அம்பலவன்—தேர்தல் - கொள்ளுதல். "விளங்குதலை யோட்டில் உண்பலி **தேரிய** வந்தென துள்ளங் கவர்கள்வன்" என்ற **ஞானசம்பந்த** அடிகள் முதலாவது பதிகம் 4-வது பாட்டில் தேர்தல் இப் பொருள் குறித்தமை காண்க. பிச்சை ஏற்றல் ஆகிய சிவபெருமானது பொது இயல் வடிவமானது ஏனைய வடிவங்கள் போன்று அவனுடைய அடியார்களுடைய ஒழுக்கத்துக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. இக் கருத்தைத் **திருமூலர்** திருமந்திரம் 1888-வது பாட்டில் "பரந்துல கேழும் படைத்த பிரான்—இரந்துண்ணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்—நிரந்தரமாக நினையு மடியார் இரந்துண்டு தன்கழ லெட்டச்செய்தானே' என்ற பாட்டிலும் **திருஞான சம்பந்த** அடிகள் திரு இலம்பையங் கோட்டூர்ப் பதிகம் 6-வது பாட்டில் 'மனமுலா மடியவர்க் கருள்புரி வகையலால் பலிதிரிந் துண்பிலான்' என்றும் கூறியருளினார். உண்பலி தேர் அம்பலவன் என்றதனால் யாதொரு பற்று மிலாது உயிர்கள் தன்னைப்போல இன்பம் அடையும் பொருட்டு புறத்திலே தில்லையிலும், அகத்திலே உயிர்களுடைய உள்ளத்திலும் ஒழிவின்றி நடனஞ் செய்கின்றவன் என்பது பின்னே கூறப்படும் "தேனார் கமலமே சென்று ஊதுதலுக்குக்" காரணமாகக் கூறப்பட்டது. தேனார் கமலமே சென்று ஊதாய்—கமலம்-தாமரைப் பூ. அது இங்கே சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் குறிக்கின்றது. மலமே என்பதிலுள்ள 'ஏ' பிரிநிலை ஏகாரம். தினைத்தனை தேனுள்ள சிறு பூக்களிடம் போய் ஊதாது எப்பொழுதும் இன்பத்தேன் சொரிகின்ற திருவடித் தாமரைப் பூக்களில் மட்டுமே சென்று ஊதுவாயாக என்ற கருத்து பிரிநிலை ஏகாரத்தால் உணர்த்தப்பட்டது. கமலம் சென்று என்பது ஏழாம் வேற்றுமைத் தொகை. ஊதுதல் - பூவிலுள்ள தேனை உண்ணுதற்கு அதனிடத்து வண்டுகள் ரீங்காரம் செய்தல். உள்ளத்துக்கு ஏற்றிக் கூறுங்கால் நிலையில்லாத உலக சிற்றின்பத்தை நாடித்தேடிஉழலாது நிலையான பேரின்பத்தைத் தரும் திருவடிகளுக்கு மனத்தால் நினைத்தும் நாவாற் புகழ்ந்தும் உடலால் தொண்டு செய்தும் வழிபடுதலாகும்.

இந்தப் பாட்டில் **மாணிக்கவாசக** அடிகள் தம்மைத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் ஆண்டருளிய பின் அதாவது அவனோடு இரண்டற அத்துவிதமாய்க் கலந்து நிறைவு அறிவை அடைந்தபின்

நான்ஆர் என்பதும் தமது தன்வயமற்ற தன்மையும் சிவமாம் செம்மைத் தன்மை அடைந்த தமது உள்ளத்தினிலையும் தாம் அடைந்த கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை, என்ற நால்வகை அநுபூதி ஞானங்களின் நிலையும் உணர்ந்து அறிந்ததாகத் தமது சுவாநுபவத்தை உலகமாந்தர் அறிந்து உய்யுமாறு கூறினார். நான்ஆர் என்றதனால் சரியை ஞானமும் என்னை அறிவார்ஆர் என்றதனால் சரியை ஞானம் அடங்கிய கிரியை ஞானமும் எனது உள்ளம்ஆர் என்றதனால் சரியை கிரியை ஞானங்களடங்கிய யோக ஞானமும் ஞானங்கள் ஆர் என்றதனால் சரியை, கிரியை, யோக ஞானங்களும் அவை அடங்கிய ஞானத்தில் ஞானமாகிய மெய்ஞ்ஞானமுங் கூறப்பட்டன. இன்னும் நான் யார் என்றதனால் அசத்துத் தன்மை நீங்கிச் சத்துத் தன்மை அடைதலும் (from the unreal to the real) 'என்னை அறிவார்ஆர்' என்றதனால் அசித்துத் தன்மை நீங்கிச் சித்துத் தன்மை அடைதலும் (from darkness to light) 'எனது உள்ளம் ஆர், ஞானங்கள் ஆர்' என்பன வற்றால் பிறப்பு இறப்புக்களாகிய பிறவித் துன்பம் நீங்கி நிலையான பேரின்பம் அடைதலும் (from death to immortality) கூறப்படுகின்றன. முப்பொருள்களுள் இறைவன் சத்துப் பொருள், உலகம் அசத்துப் பொருள் உயிர் சத்து அசத்துப் பொருள். சதசத்தாகிய உயிர் முதலாவது உலகத்தைச் சார்ந்து உலக மயமாய் அனுபவமடைந்து பின் சிவத்தைச் சார்ந்து சிவமயமாய்ப் பேரின்பம் அடைகின்றது, என்ற சித்தாந்த உண்மையை, ஆண்டிலனேல் என்ற எதிர்மறையில் வைத்து இப்பாட்டு கூறுகின்றது. இதே கருத்தை 'இன்றெனக் கருளி யிருள் கடிந்து' என்ற முதற் குறிப்புத் திருவாசகப் பாட்டு, உடன்பாட்டில் வைத்துக் கூறுகின்றது. அந்தப் பாட்டில் இன்று என்பது **ஆண்டருளியபின்** என்று பொருள்படும். இருள் கடிந்து, என்பது நான் ஆர், என்னை அறிவார் ஆர் என்பவற்றோடும் உள்ளத்தில் எழுகின்ற ஞாயிறு போன்று நின்ற தன்மை என்பது உள்ளமார் என்பதனோடும் அருளி என்பது ஞானங்களார் என்பதனோடும், உன்னை அறியகிற்பார் யார் என்பது இந்தப் பாட்டில் வரும் மூன்று ஆர்களோடும் 'என்னை அறியவல்லார்' யார் என்பதனோடும் கருத்திற் பொருந்துதலையும் 'ஒன்றும் நீ அல்லை அன்றி யொன்றில்லை, என்பன உயிர் வேறாய் நின்று இறைவனை அறிய மாட்டாமைக்குக் காரணமாய்க் கூறப்படுதலையும் உற்று நோக்குக. இவ்வாறு இவ்விருபாட்டுகளும் ஒன்றனை ஒன்று விளக்குவனவா யிருக்கின்றன என்பது கண்டுகொள்க.

—மா. வே நெல்லையப்ப பிள்ளை.

# ஆராய்ச்சிப் பகுதி - Research

## திருச்செங்கோடு

[திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் B.A.,B.L.]

இவ்வூர் சங்ககிரி ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் இருக்கிறது. ஊரில் கைலாயநாத சுவாமி ஆலயம் என்ற ஒரு பெரிய ஆலயம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் நான்கு பெரிய வீதிகள் சதுரமாக இருக்கின்றன. முன்னொரு காலத்தில் இவ்வூரிலொரு கோட்டை இருந்ததாகச் சொல்லுவார்கள். ஆனால் அதற்குரிய அடையாளம் இப்போது ஒன்றும் கிடையாது.

இவ்வூருக்குத் தென்கிழக்கில் 1901 அடி உயரமுள்ள ஒரு செங்குத்தான மலை இருக்கிறது. இம்மலையின் பெயர்தான் இவ்வூருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இம்மலையின் உற்பத்திக்கு ஒரு புராண கதையுண்டு. ஆதிகாலத்தில் வாயு பகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் தங்களில் யார் வல்லவர் என்ற வாக்கு வாதம் உண்டாக அதனை நிரூபிப்பதற்காக ஆதிசேஷன் தன் படங்களை விரித்துக்கொண்டு இமயமலையின் சிகரங்களைத் தாங்கிப் பிடித்துக்கொண்டானாம். வாயுபகவான் அதன் சிகரங்களை இடித்துத்தள்ள விரைவாய்க் காற்றை வீசி ஓங்கினானாம். அச்சண்டையில் ஒரு சிகரம் ஆதிசேஷனின் இரத்தக் கறையோடு பறந்து இவ்விடத்தில் விழுந்ததாம். அதனால் இம்மலைக்கு நாககிரி என்ற பெயர் ஏற்பட்டதாம். மற்றொரு கதை என்னவெனில், காமதேனு சிவபிரானிடம் பிரார்த்தித்து 5 சிகரங்களைப் பெற்றதாம். அவ்வைந்து சிகரங்களாவன : கஞ்சமலை, சங்ககிரி, புஷ்பகிரி (மோரூர்மலை) ஊராய்ச்சிக்கோட்டை (பவானிக்கருகு) நாககிரி (திருச்செங்கோடு) என்பவைகள். இப்பெயர்கள் பவானிப்புராணத்தில் சில மாறுதல்களுடன் கூறப்பட்டுள்ளன. ஆகவே அர்த்தநாரீஸ்வர ஸ்வரூபம் இம்மலைமேல் ஏற்பட்டது இம்மலையின் இரண்டு சிகரங்கள் ஆணாகிய ஆதிசேஷனாலும் பெண்ணாகிய காமதேனுவாலும் ஆக்கப்பட்டதற்கு அறிகுறியாம்.

இம்மலை செங்குத்தாக உள்ளது. செங்கோடு என்ற பதமே அப்பொருளைத் தரும். மலைமேல் செடி, கொடிகள் கிடையா. பாறைகளின் நிறங்களும் மேலிருக்கும் கோயில்களும் சூரிய வெளிச்சத்தில் மிகவும் இரம்மியமான தோற்றத்தைக் காட்டு

விக்கும். மலையின் ஒரு புறத்து உச்சியில் அர்த்தநாரீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. அதற்குச் செல்லும் படிகள் 1200 உள்ளன. வழிநெடுக மண்டபங்கள் உண்டு. முதல் மண்டபத்திற்குத் தனிப் பெயரில்லை; மற்ற மண்டபங்கள் முறையே (2) சந்நியாசி, (3) திருமுடையான் (4) தைலி (5) கைக்கோளர் (6) சிங்க (7) அறுபதாம்படி (8) செட்டிய கவுண்டன் (9) தேவடியார் (10) இலைப்பத்து (11) கோபுர வாயில் என்பனவைகள். இம்மண்டபங்களுக்குத் தனித்தனி வரலாறுகளும் உண்டு.

தைலிமண்டபத்திற்கு மேற்கே ஒரு நந்தி இருக்கிறது. பக்தர்கள் அதற்கு வெண்ணெய் பூசுவார்கள். இந்நந்தி மலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனால் மலையே ஒரு இலிங்கமாக பாவிக்கப் படுகிறது. இதற்கு அருகே ஒரு பாறையில் 60 அடி நீளமுள்ள ஒரு பெரிய ஐந்துதலை நாகத்தைச் செதுக்கி இருக்கிறார்கள். இந்நாகத்திற்கு கொங்கு நாட்டு மலசர்கள் தங்களைப் பாம்பு கடிக்காதபடி பொங்கலும் கோழிப் பலியும் இடுவதுண்டு. இப்பாறையினை நாககுண்டு (நாககுன்று) என்பார்கள். இதனருகில் சோழபாண்டியக் கல்வெட்டுகள் இருக்கின்றன.

சிங்க மண்டபத்தை மோரூர் வேளாளர் நல்லதம்பிகாளியன் என்பவனுடைய வம்சத்தார் பரிபாலித்து வருகிறார்கள் இங்கே கல்வெட்டுகளில் காணும் சில வம்சத்தினர்கள் 1. திருமலை அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் (1599) 2. அத்தப்ப இம்முடி நல்லதம்பி காங்கேயன் (1619) 3. குமாரசாமி காங்கேயன் (1627) என்பவர்கள். இம்மண்டபத்துத் தூண்கள் சிங்கம், குதிரை முதலிய உருவங்களால் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. மேல் சுவரிலுள்ள மனித உருவங்கள் இதனைக் கட்டினவர்களாம்.

இம்மண்டபத்திற்கும் அடுத்த மண்டபத்திற்கும் மத்தியில் 60 படிகள் இருக்கின்றன. அவைகளைச் சத்தியப்படி என்றும் அறுபதாம்படி என்றும் சொல்லுவதுண்டு. பணவிஷயமாக சச்சரவு நேரிட்டால் இங்கே கர்ப்பூரம் அவிழ்ப்பதாக சபதம் கோருவதுண்டு. இவ்வழக்கம் சென்னை ஐகோர்ட்டு வரை ஏறியிருக்கிறது. இப்படிகளுக்கு அருகில் ஒரு பாறையில் சோழர் கல்வெட்டுகள் இருக்கின்றன. மேலிருந்து 7-ம் படியில் அறுபதாம்படி மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதனைக் கட்டினவன் குமாரசாமிக் காங்கேயன். இப்பொழுது இதனைச் சானார்கள் பரிபாலிக்கிறார்கள். இதற்கு அடுத்த பாறையைப் பாண்டவக்குண்டு (பாண்டவக்குன்று) என்றழைப்பார்கள். இப்பாறையின்மீது முன்காலத்தில் ஒரு கோட்டை இருந்ததாம். அக்கோட்டையின் வடக்கு வாயில் பைரவ தீர்த்தத்தண்டை



இருந்ததாம். இப்பொழுதும் இதனைக் கோட்டை வாயில் என்றழைப்பார்கள்.

கோபுர வாயில் மண்டபத்தை 1654-ல் சீயாள கெட்டி முதலியார் கட்ட ஆரம்பித்தார். அதனை இராசிபுரத்து விஜய குலத்தார்கள் கட்டி முடித்தார்கள்.

இதற்குப் பிறகு அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்துக் கோபுர வாயில் இருக்கிறது. அதன் வேலையை 1512-ல் திரியம்பக உடையார் ஆரம்பித்தார். அதனை 19-ம் நூற்றுண்டில் பொது மக்கள் திருப்பிக் கட்டினார்கள். கோயில் மட்டமானது கோபுரத்திற்குக் கீழ் 20 அடி தாழ்ந்திருக்கிறது. வெளிப்பிரகாரம் கீழ்மேல் 220 அடியும் தெற்கு வடக்கில் 198-ம் கொண்டிருக்கிறது. உள் கோயிலானது கீழ்மேல் 170-ம் தெற்கு வடக்கில் 95 அடியும் கொண்டது. மகாமண்டபம் சங்ககிரி துர்க்கம் ஆண்ட சாம்போஜி கட்ட ஆரம்பித்து 1684-ல் தாரமங்கலத்து சீயாள கெட்டி முதலியார் முடித்தார். கோயில் மேற்கு பார்த்த சந்நிதி. வேலூர் விருபாக்ஷராயன் காலத்தில் திருவாவடுதுறை பண்டாரமொருவர் ஒரு கவி பாட இவ்வாலயத்தின் நந்தி கொள்ளைத் தின்றதாம்.

நிருத்த மண்டபத்தை 1599-ல் மோரூர் அத்தப்ப நல்லதம்பி காங்கேயன் கட்டினான். இதைப்பற்றி கல்வெட்டும் உண்டு. இதன் கல் வேலை தாரமங்கலத்தைப் போன்று உள்ளது. கல்லினால் செய்த சங்கிலிகள் மிகவும் நுண்ணிய வேலை. நந்தியின் வடக்கே யுள்ள ஒரு தூணில் அத்தப்ப நல்ல தம்பி காங்கேயனும் அவனுடைய மூன்று மனைவிகளும் உருவமைக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனங்கள் தங்கள் நோய்தீர்க்க இத்தூணைச் சுற்றுவதுண்டு. கோயிலுக்கு வடக்கே சுப்பிரமணியர் ஆலயம் இருக்கிறது. அதற்கு ஒரு அழகிய மகாமண்டபம் உண்டு. அதனை 1619-ல் இம்முடி நல்லதம்பி காங்கேயன் கட்டினான். அதன் விமானத்தை சீயாள கெட்டி முதலியார் கட்டினார்.

விக்கிநேஸ்வரர் மண்டபம் அர்த்தநாரீஸ்வரர் ஆலயத்திற்குத் தெற்கே உள்ளது. அதனையும் தாண்டவபட்டிரை விலாசம் என்பதையும் 1627-ல் குமாரசாமி காங்கேயன் கட்டினான். சென்ற நூற்றுண்டில் அதில் பிளவு ஏற்பட்டது. அதனை 1823-ல் சேலம் கலெக்டர் டேவிஸ் என்பவர் திருப்பணி செய்வித்தார். ஒரு தூணில் அவர் உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. அது 3 அடி உயரமும் தலையில் தொப்பியும் கையில் கைப்பிரம்பும் கொண்டிருக்கிறது. அந்தத் தூணுக்கு அருகில் மற்றொரு தூணில் குமாரசாமிக் காங்கேயனும் அவனுடைய

நான்கு மனைவிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றனர். இத்தூணும் சுரம் தீர்க்குமாம்.

சுப்பிரமணியர் ஆலயத்து நிருத்த மண்டபத்தைக் குமாரசாமி காங்கேயன் மைத்துனனான இலுப்பிலி இளைய கவுண்டன் கட்டினான். நாகேஸ்வரர் ஆலயத்தை வேட்டுவர் தலைவன் ஆறை இம்முடி அல்லால இளையான் கட்டினான். அவன் பரமாத்தியில் காவிரியைத் திருப்பினவனாம். அவ்வாலயத்து விமானத்தை 1685-ல் வேட்டுவச் செங்கோடன் கட்டினான்.

மலையின் உயர்ந்த சிகரத்தில் பாண்டீஸ்வரர் ஆலயம் இருக்கிறது. 13-வது நூற்றாண்டில் பாண்டியர்கள் படை யெடுத்து இங்கே தங்கள் சின்னத்தை நிலைநிறுத்தினார்கள்.

பாண்டீஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் மலடிக்கல் என்ற ஒரு பாறை யிருக்கிறது. அதற்குக் கீழ் 800-அடி உயரமுள்ள ஒரே செங்குத்துப் பாறை இருக்கிறது. மலடிகள் இப்பாறையை மூன்று தட்வை தவழ்ந்து வந்தால் சந்ததி உண்டாகுமாம். பலதடவை இங்கே உயிர்ச் சேதம் உண்டானதால் இவ்வழியை அரசாங்கத்தார் அடைத்து விட்டனர்.

மலையின் உச்சிக்குக் கீழே பஞ்சபாண்டவர்கள் படுக்கை இருக்கிறது. அங்கே மூன்று படுக்கைகள் விரித்தாற்போல் காணப்படுகிறது. இது சமணர்களுடைய சின்னமாயிருக்கலாம்.

கீழே ஊரில் இருக்கும் ஆலயமான கைலாயநாதசுவாமி ஆலயம் 250 அடி கொண்ட ஒரு சதுரமாகும். முன் கோபுரம் 76-அடி உயரமுள்ளது; அதன் அஸ்திவாரத்தை 1064-ல் கொண்டப்பையன் கட்டினான். அதற்கு முன் ஒருகல் தீபஸ்தம்பம் 31-பட்டைகள் கொண்டதாய் இருக்கிறது. அம்மன் கோயில் இம்முடி நல்லதம்பி காங்கேயன் கட்டினது. ஆலயத்துள் ஒரு கிணறும் அதற்கு அடியில் செல்லும் ஒரு வழியும் உண்டு. ஊருக்கு அருகில் பாமாத்தி வழியில் மலைக்காவலர் கோயில் என்ற ஒரு ஆலயம் இருக்கிறது. இதில் சூலாயுதங்கள் நடப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு உயிர்ப்பலி இடுவதுண்டு. இங்கே பேயோட்டுதலு முண்டு.

திருச்செங்கோட்டில் கல்வெட்டுகள் பல இருக்கின்றன. சோழர்கள் காலத்தில் பிராமணர்களுக்குத் தானமும் கோயிலுக்கு நந்தாவிளக்கும் வைக்க பூதானம் செய்திருக்கின்றார்கள், பராந்தகன் I (906) கங்கை கொண்ட ராஜேந்திரன் இவர்களுடைய கல்வெட்டுகள் பழையவை. பாண்டியர் காலத்திலும் பூ



தானம் விடப்பட்டன. 1522-ல் கிருஷ்ண தேவராயன் காலத்தில் சந்தைவரி கோயிலுக்குக் கொடுக்கப்பட்டது. மதுரை நாயகர் காலத்திலும் பூதானம் செய்யப்பட்டது. 1659-ல் திருமலைமகன் முத்துக்குமாரனுடைய நன்மைக்காக ஒரு கிராமம் தானம் செய்யப்பட்டது. 1663-ல் சொக்கநாதர் காலத்தில் கைலாச நாதர் ஆலயத்து மேல் கோபுரம் கட்டப்பட்டது. 1734-ல் மைசூர் கிருஷ்ண ராஜன் இக்கோயிலுக்கு ஒரு பூதானம் செய்தான். கல்வெட்டுகளால் நாம் காணும் ஒரு செய்தி என்னவெனில் இக்கோயிலுக்கு உதவி செய்தவர்கள் பெரும்பாலும் குடிகளே யன்றி மன்னர்கள் அல்லர் என்பதே.

---

# சேது

[கா. சிவ. க.]

மதுரைக்குத் தென்கிழக்கில் 110 மைல்கள் தொலைவிலுள்ளது; கல்லாலும் மணலாலுமாகிய குறுகிய நிலவீச்சு; வடக்கிலும் வடகிழக்கிலும் மன்னார் வளைகுடாவை யொட்டிச் செல்கிறது. மேற்குக்கோடி இராமேச்சுரத்தை இணைக்கிறது, கிழக்குக்கோடி மன்னார்தீவின் கீழ்ப்பகுதியை இணைக்கிறது. இவ்விரு தீவுகளையும் சேர்த்துக்கொண்டால் இந்தியத் தென்பகுதியுடன் ஈழத்தை இஃது இணைத்து நிற்கிறதென்றே சொல்லலாம்; இராமர் அணையென்றும் சொல்லப்படும். இதன் வழியே அநுமானின் துணைகொண்டு இராமன் தன் சேனைகளுடன் இலங்கைக்குப் படையெடுத்துச் சென்றதாகக் கூறுவர். கி. பி. 1480-ம் ஆண்டு வரை இச்சேதுக்கரை இந்தியாவை ஈழத்துடன் இணைத்திருந்தது உண்மையே. அவ்வாண்டில் ஏற்பட்ட ஒரு கடும்புயலில் இவ்வணையில் ஒரு பிளவுண்டாயிற்று. அதன் பிற்காலத்தெழுந்த மற்றொரு பெரும்புயலில் பிளவுகள் அதிகப்பட கால்நடைப் போக்குவரத்துத் தடைப்பட்டது. இதன் நீளம் ஏறக்குறைய 30 மைலும் அகலம் 1¼ மைலும் ஆகும். தென்கிழக்கிலிருந்து வடமேற்காக அமைந்தது. சில பகுதி நீர் மட்டத்திற்கு மேலும் சில பகுதி நீர்மட்டத்திற்கு மூன்று நான்கடி கீழும் இருக்கின்றன.

—சென்னை மாகாண அரசியன் முறைவிளக்கம்: தொகுதி III

---

## இலக்கணமும் இலக்கியமும்: LANGUAGE AND LITERATURE

# இந்தியாவும் சாவகமும்

(திருவாளர் S. நடராஜ பிள்ளை B. A.)

(கஉ-ம் சிலம்பு ௫௦௩-ம் பக்கத் தொடர்ச்சி.)

### மேற்குச் சாவகம்—5 6-ம் நூற்றாண்டுகள்

சாவகத்தில் இந்திய நாகரிகம் கி. மு. 1-ம் நூற்றாண்டுக்கு முன்னர் பரவியிருந்த தெனினும் இதைப்பற்றிக் கிடைத்துள்ள அறிகுறிகள் கி. பி 4-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதாகவே இருக்கின்றன. கி. பி 450-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று பூர்ணவர்மன் என்னும் அரசனைப்பற்றிக் கூறுகின்றது. இவ்வரசன் படேவியாவுக்கருகில் தருமபுரம் என்னும் பட்டினத்தைத் தலைநகராய்க் கொண்டு அரசாண்டதாயும், சந்திரபாகி, கோமுகி என இரு வாய்க்கால்கள் வெட்டியதாயும் இக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இம் மன்னனின் பிறிதொரு கல்வெட்டில் இவனுடைய இரு பாதங்களும் செதுக்கப்பட்டு அவைகளைத் திருமாலின் சுவடிகளுடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டில் இவ்வேந்தனின் பட்டத்து யானையின் பாதங்கள் காணப்படுகின்றன.

இவனுடைய காலத்தில் சீனநாட்டு பௌத்தயாத்ரீகனான பாகியான் என்பார் (413-ல்) இலங்கையிலிருந்து சாவகமுற்றிருத்தல் வேண்டும். இவர் சாவகத்தில் பௌத்தம் பரவவில்லை எனவும் பிராமணரின் நிலை உயர்ந்திருந்த தென்றும் கூறியுள்ளார். சாவகத்திலிருந்து இவர் இருநூறு இந்து வர்த்தகர்களுடன் கப்பலில் சீனம் அடைந்தார் எனத் தெரிகிறது.

கி. பி. 423-ம் ஆண்டில் காஷ்மீரத்து இளவரசரான குணவர்மன் சாவகத்தில் பௌத்தத்தைப் பரப்ப முயன்றார். இவர் முயற்சி வெற்றியடையாது போகவே, நந்தி என்பாருக்கு உரிமையான ஓர் மரக்கலத்தில் இவர் சீனம் அடைந்ததாயும் கூறப்படுகிறது.

சாவகத்தரசனான ஸ்ரீபாததேவ வர்மன் (Sri-pa-da-do-a-la-pa-mo) என்பார் கி. பி 435-ல் சீனத்திற்கு ஓர் தூதுக் கூட்டத்தைத் திருமுகம் ஒன்றுடன் அனுப்பியதாயும், சீன அரசர்



அதை அன்புடன் வரவேற்றதாயும் சீன வரலாறு (History of the first Sung dynasty of China) கூறுகிறது. 6-ம் நூற்றாண்டின் முதல் பகுதியைக் கூறும் மற்றொரு சீன வரலாறு மேற்குச் சாவகத்திலிருந்த லாகசு (La-ga-su) என்னும் நாட்டைப்பற்றித் தெரிவிக்கிறது. இந் நாடு 400-ஆண்டுகளாய்த் தனி நாடாய்த் திகழ்ந்ததாயும் இந் நாட்டு அரசர்களில் ஒருவன் கொடுங்கோல் புரிந்தமையால் குடிமக்கள் இவ்வரசனின் உறவினர் ஒருவரை அரசராக்கக் கருதியதாயும் இதை அறிந்த மன்னவன் அவ்வுறவினரை நாடு கடத்தியதாயும் அவ்வுறவினர் இந்தியா சென்று ஓர் இளவரசியை மணந்து மன்னன் இறந்த பின்னர், குடிகளின் வேண்டுகோட் கிணங்கி அரியணை யமர்ந்த தாயும் அந் நூலில் காணப்படுகிறது.

இவற்றால் மேற்குச் சாவக மன்னர்கள் 5,6-நூற்றாண்டுகளில் பலாட்டியராய் விளங்கின ரென்றும், சீனம், இந்தியா முதலிய பக்கத்து நாடுகளுடன் நேசப் பான்மை யுடன், நன்மதிப்புப் பெற்று திகழ்ந்தனர் என்றும் பெறப்படுகிறது. மரக்கலங்களின் உதவியால் "திரைகடலோடி" வாணிபஞ் செய்து பொருளீட்டிவந்தன ரென்பதும் விளங்குகிறது. இக் காலத்து இந்நாட்டுச் சமயம் சைவ மாயிருந்த தென்றும், பௌத்தத்தைப் பரப்ப, பெருமுயற்சிகள் நிகழ்ந்தன வென்றும் அறியக்கிடக்கிறது. இந்நாட்டில் அகத்தியர் வணக்கம் தலைசிறந்து மிளிர்ந்த தெனவும் அறிகிறோம்.

### நடுச் சாவகம்—7, 8, 9 நூற்றாண்டுகள்

6-ம் நூற்றாண்டி னிறுதியில் மேற்குச் சாவக மன்னர் நிலைகுலைய நடுச் சாவகத்தில் கலிங்கம் என்னும் நாடு முன்னேறியது.

கி. பி 637-649 ஆண்டுகளில் கலிங்கம் பிற சிறுநாடுகளைத் தன்னுள் ளடக்கி வல்லரசாயிற்று. வல்லரசாகிப் பெருகியதும் இந் நாட்டு மன்னர்கள் சீனதேசத்து டாங் வமிசத்து வேந்தர்களுக்குத் தூதுக் கூட்டங்களும், திருமுகங்களும், அனுப்பித் தம் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். சாவகத்தில் இன்றும் கலிங்கம் என்னும் பெயரைப் போற்றுகின்றனர். இந்திய நாட்டிலிருந்து போகும் மக்களைச் சாவகத்தார் "ஓரங்கலிங்" (Orang Keling) என்கின்றனர். பர்மியர் இன்றும் தமிழரைக் கள்ளர் (Kalla) என்பது ஈண்டு கவனித்தற் பாலதாம்.

கி. பி. 67-ல் பழந்தமிழ் வழக்கை யொட்டி கலிங்கத்திற்கு அரசியாக சீமா என்னும் மாதைத் தெரிந்தெடுத்தார்கள். இம் மங்கையின் ஆட்சி சிறப்புடன் திகழ்ந்தது. இவள் காலத்தில்

அமைதியும் ஒற்றுமையும் நிலவின. மக்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர். சுமித்திராவில் பண்டு தொட்டே வாழ்ந்துவந்த ஓர் அரேபியக் குழுவினர் இவ்வரசியின் ஆட்சியை மிகவும் வியந்து கூறியிருக்கின்றனர். இவள் காலத்தில் திருடர்பயம் அறவே ஒழிந்திருந்த தென்றும் மக்கள் பிறர் பொருட்கு ஆசைப்படாது திருப்தியுடன் வாழ்ந்தனர் என்றும் தங்கள் குறிப்புக்களில் எழுதியுள்ளனர். அரசி சீமாவுக்குப் பின்னர் கலிங்கத்தைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை.

இதற்குப் பின்னர் கிடைத்துள்ள ஆதரவு கி. பி. 732-ம் ஆண்டின் சனக்கல் கல்வெட்டாம். இதுதான் சாவகத்து மண்ணில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் பழமையானது. இது நடுச் சாவக மன்னனான சஞ்சையனால் வெட்டுவிக்கப்பட்டது. இதில் சிவன் கோவில் ஒன்றைப் புதுப்பித்தமை கூறப்படுகிறது. துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள கோன நாட்டில் இருந்த அகத்தியர் ஆச்சிரமத்தைப்போல் இக் கோவில் புதுபிக்கப் பட்டதாயும், அகத்தியர் கொடிவழியைச் சார்ந்தார் இத்திருப்பணியில் கலந்து கொண்டதாயும் இக் கல்வெட்டு கூறுகிறது. தந்தையும் மகனுமான, சன்னகன், சஞ்சையன் என்னும் இரு நடுச் சாவக மன்னர்களும் நீதி கோடாது மனுவைப் போல் அரசாண்டதாகவும் இதில் பொறிக்கப்பட்டுளது. சஞ்சையன் தன் படைவலியால், சாவகத்திலுள்ள ஏனைய நாடுகள், சுமித்திர, பாலி, மலாக்கா முதலிய நாடுகளையும் வென்று ஓர் குடைக்கீழ் ஆண்டதாகப் பிற்காலக் கதைகள் வலியுறுத்து கின்றன.

கி. பி. 863-ம் ஆண்டுக் கல்வெட்டொன்று அகத்தியரைப் பற்றிக் கூறுகிறது. "பத்திரலோக" என்னும் பெயர் கொண்ட ஓர் கோவில் அகத்தியரால் கட்டப்பட்டதாக இதனால் தெரிய வருகிறது. இக் காலத்தில் அநேக சிவாலயங்கள் கட்டப்பட்டன. சைவசமயம் சிறப்புடன் திகழ்ந்தது. தென்னிந்தியாவிலிருந்து திரளான மக்கள் வந்து குடியேறினர். தென்னாட்டுக் கலைகளும், நாகரிகமும் ஈண்டுப் பரப்பப்பட்டன. இந் நாட்டு இளவரசர்களும், இந்தியா சென்று, இந்தியக் கலைகளையும், பழக்க வழக்கங்களையும் பயின்றுவந்து தம் நாடுகளை வளமுறச் செய்தனர்.

8-ம் நூற்றாண்டி னிறுதியில் அரசியற் குழப்பங்கள் நிகழ, சுமித்திராவிலுள்ள ஸ்ரீ விசயநாட்டுச் சைலேந்திர மன்னர்கள் நடுச் சாவகத்தைக் கைப்பற்றினர். ஸ்ரீ விசய மன்னர்கள் பௌத்த தருமத்தை ஓம்பி வளர்க்க லானார்கள். இவர்கள் நாகபட்டினத்தில் சோழ மன்னர்களின் அனுமதியின் பேரில் ஓர் பௌத்தக்



கோவில் கட்டினார்கள். பாலபுத்திரதேவன் என்னும் ஸ்ரீ விசய நாட்டு வேந்தன் (Nalanda) நலந்தாவில் ஓர் பௌத்த மடம் கட்டி அதற்குவேண்டிய பொருள் கொடுத்ததாகத் தேவபாலனின் நலந்தாப்பட்டயங்கள் கூறுகின்றன. ஸ்ரீவிசய மன்னர்கள் மலாக்கா, பாலி முதலிய அக்கம் பக்கத்து நாடுகளை வென்று ஓர் குடைக்கீழ் ஆண்டனர்.

கி. பி. 778-ம் ஆண்டுக் கல்வெட்டால் ஸ்ரீ விசயநாட்டுச் சைலேந்திர மன்னர்களின் ஆணைப்படி நடுச் சாவகத்தில் அழகிய பல பௌத்தக் கோவில்கள் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. இக் காலத்தில் பௌத்தம் சைவம் இரண்டும் ஒன்றாய்க் கலந்துவிட்டது. 8-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் சாவகத்தின் கலையிலும் நாகரிகத்திலும் தென்னிந்தயாவின் ஆதிக்கம் குறையத் தலைப்பட்டது. இக்காலத்தில்தான் சிற்பத்திற்கே முடிமணியாய் விளங்கும் புரோபுதூர் என்னும் பௌத்தக்கோவில் கட்டப்பட்டது. சைலேந்திரர்களின் செல்வாக்கு கி. பி. 863-க்கு முன்னர் ஒழிக்கப்பட்டுக் கீழைச் சாவகத்து இந்து மன்னர்கள் தலை தூக்கலாயினர். 863-ம் ஆண்டுக் கல்வெட்டில் மீண்டும் அகத்தியர் வணக்கம் வலியுறுத்தப்பட்டுளது.

ஸ்ரீ சைல மன்னர்களால் நடுச் சாவகத்தினின்றும் துரத்தப்பட்ட சைவ அரசர்கள் கி. பி. 863-ல் மீண்டும் ஆதிக்கம் பெற்றனர். இவர்கள் சைலேந்திரர்களைத் தோற்கடித்துத் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். இவர்கள் மாதரம் என்னும் நகரைத் தலைநகராக் கொண்டு 863-முதல் 915 வரை பலத்துடன் ஆண்டனர். மாதரத்தின் இறுதி மன்னன் சிற்பக் கலை வல்லோர் வியந்து போற்றத்தக்க முறையில் பரம்பாணம் என்ற கோயிலைக்கட்டினான். பின்னர் நடுச் சாவகத்தின் வலி குன்றிக் கீழைச் சாவகத்தின் ஆட்சிக் குட்பட்டது.

7, 8,9-ம் நூற்றாண்டுகளில் சாவகத்திற்கும் இந்தியாவுக்கும் போக்குவரவு அதிகமாய் இருந்ததாக அறியக் கிடக்கின்றது. சாவகத்து இளவரசர்கள் இந்தியா சென்று கல்வி பயின்று வந்திருந் திருக்கின்றனர். மனு நீதி கண்ட சோழனைப் போல் மனு நீதி கண்ட சஞ்சையன் என்னும் நடுச் சாவக மன்னனைக் காண்கின்றோம். தென்னிந்தியாவில் நாகபட்டினத்திலும் வட இந்தியாவில் நலந்தாவிலும் சாவகத்தரசர்கள் பௌத்த மடங்கள் கட்டியதையும் காண்கிறோம். நடுச் சாவகத்திலுள்ள டெயிங் (Dieng) பீடபூமியில் எஞ்சியுள்ள ஞாபகச் சின்னங்கள் சென்னைக்கடுத்த மாபலிபுரத்துள்ள ஏழுகோபுரங்களை ஒத்திருக்கின்றன. நடுச்சாவகத்திலுள்ள பரம்பாணம் என்னும் சிவன்

கோவிலில் இராமாயணக் கதையின் பல பாகங்கள் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. ஏழுகன்னிகைகள் சிலைகள், காளி சிலை, முதலிய நம் நாட்டுச் சிலைகள் பல உள. சிற் சில சிலைகள் இந்திய நாட்டில் செய்யப்பட்டதாயும் கருதப்படுகின்றன. கோவில் என்பதற்குக் காவிமொழியில் சந்தி (Chandi) என்பார்கள். வீரர்களின் சமாதிக்கு சந்தியெனப் பெயர் வழக்கிலிருந்ததாம். எவ்வாறு பெரியாரின் சமாதிகள் தமிழ் நாட்டில் கோவிலாய்த் திகழ்கின்றனவோ அவ்வாறே சாவகத்திலும் சமாதியாய சந்திகள் பின்னர் கோவிலாய் மாறின. சாவகத்தில் தமிழ்க்கலை பரவியதற்குள்ள அத்தாட்சிகள் பலவற்றில் இதுவும் ஒன்றெனலாம். சாவகத்தின் சமயமும் சிற்பமும் ஓவியமும் நம் நாட்டினதாகவே இருந்திருக்கின்றன.

(தொடரும்.)

---

# செந்தமிழொலி யிலக்கணம்

[திரு. பா. வே. மாணிக்கம் நாயக்கர் B. E., M. C. I. அவர்கள்]

## பொருட்குறிப்புகள் (Subject Outline)

1. தமிழகமும் அகத்தியனார் பொதியமலையும் இவ்வுலகின் முதலூழியிலிருந்து இருக்கின்றன வென்பதும், நடு ஆசியாவும் சிவனார் கைலைமலையும் கடையூழிக்குச் சற்று முன்பே யுண்டாயின வென்பதும் இற்றைக்குமுள்ள கலைஞர்களால் மறுக்க வேலாதன.

2. இப்போதுள்ள தமிழ் நூல்களிலெல்லாம் மிகவுந் தொன்மையானது **பழங்காப்புச் சோல்** என்று பொருள்படும் "தொல்காப்பியம்" என்னும் இலக்கண நூலேயாம். இது பாணினியின் வடமொழி யிலக்கணத்திலும் பழையது.

3. தமிழ் மொழியின் அசையா நிலைமையானது உலக மொழிகளின் நிகழ்ச்சியில் ஒரு காணுக்காட்சி.

4. தமிழ்மொழி தன் பிரிவுட்பிரிவுகளிலும் மூலமுப் பொருள்களின் தத்துவங்களை யொட்டி நடப்பதும், அதன் இலக்கணநூல் அவ்வாறே மூலமுப்பொருள்களின் தத்துவங்களை இடைவிடாது பேசுவதும் உலக மொழிகளிலக்கணங்கள் யாவற்றிலுங் காணுதவோர் பெரிய காட்சி.

5. எழுத்துக்களின் மந்திரப்பொருளும், மொழிபடு பொருளும் தமிழில் ஒன்றாக இருப்பது எதனினும் காணுக்



காட்சி. "தனிநிலை", "உயிர்கள்", "உடல்கள்" என்பன தமிழெழுத்துக்களின் பகுப்புப் பெயர்களாம்.

6. இயற்கையில் மூலவடிவமாயுள்ள கருவின் உருவமே தமிழில் ஓகாரம், அதாவது மூலப்பிரணவம். இவ்வடிவமே கடவுளுடைய அபயாஸ்த வர்தாஸ்த மூர்த்தமாகக் காட்டப் பட்டுள்ளது. இவ்வடிவினின்றே தமிழின் மற்றைய வரிவடிவங்கள் கிளம்பி யிருக்கின்றன. இவைகள் தந்தம் மந்திரப்பொருளைத் தந்தம் வடிவாலேயே நன்கு விளக்குகின்றன.

7. இயற்கைப் பொருளை யிற்றெனக்கிளத்துவதும் செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறுவதும் தமிழிலக்கணத்தின் முறையாம்.

8. முற்பட்ட விலக்கியங்கள் முற்றுமழிந்தனவாயினும் இயற்கை விளக்கமாகிய தொல்காப்பியமெனும் தமிழிலக்கணம் ஒன்றிருப்பதுவே, தமிழ்மொழியை மற்றெவற்றிற்கும் உயர்ந்ததாகக் கொள்ளற்குப்போதிய ஆதாரம்.

9. தமிழின் ஒலியிலக்கணம் முற்றத்திருத்தமும் பொருண்மை வரையறையும் எம்மொழிக்கும் பொதுமையும் வாய்ந்த ஓர் இயற்கை விளக்கநூல் (natural science).

10. கூட்டொலிகளைத் தனி யெழுத்துக்களாக மற்றைய மொழிகள் எண்ணுவதுபோல தமிழ் தாடலை தெரியாது எண்ணுவதில்லை.

11. மற்றையமொழிகள் போலாது கூட்டல்குறைத்தல் இயலாதவர்க்கு முயற்சியாலாகும் எழுத்தொலிகளிவை யென்றும், முயற்சி வேற்றுமையாலாக்கக்கூடிய எண்ணிறந்த எழுத்தொலிகளிவையென்றும் தமிழ் பாகுபடுத்தி யுணர்த்துகின்றது.

12. வாக்குறுப்புக்களின் கூட்டல்குறைத்தல் ஏலாத குறிப்பான முயற்சிகளால் ஒலிக்கக்கூடிய எல்லா வெழுத்துக்களும் தமிழ் மொழியில் "உயிர்கள்" என வழங்கும் பன்னிரண்டும், "உடல்கள்" என வழங்கும் பதினெட்டுமே.

13. தமிழெழுத்துக்களினமைப்பைவிட எளியது நினைத்தற் கெட்டாததாயினும், அதுவே எல்லா மொழிகளுக்கும் பொதுவான அமைப்பாம்.

14. தமிழொலி யிலக்கணப்படி, எழுத்துக்களின்முன், பின் அல்லது உடன்சார உயிர்த்தலென்னும் ஆய்தமும், இதழ்குவியாது எழுத்துக்களில் உகர ஒலிப்புண்டாக்குதலாகிய குற்றியலுகரமும், நாவின் விளிம்புகளை யுயர்த்தாது எழுத்துக்களில்

இகர ஒலிப்புண்டாக்குதலாகிய குற்றியலிகரமும் முடிவில்லாத ஒலியுருவங்களை யாக்குகின்றன.

15. தமிழொலி யிலக்கண வமைதியில் கூட்டொலிகள் அவைகளுக்குரிய வரிவடிவ மிற்றெனப் புலப்படுத்துகின்றன. அப்படியே இணைக்கப்பெற்ற வரிவடிவங்கள் தமக்குரிய கூட்டொலி யிற்றெனப் புலப்படுத்துகின்றன.

16. தமிழொலி யிலக்கணத்தின் விரிந்த பொதுப்பான்மையை விளக்கிக் காட்டுவனவும், பல பிறமொழிகளையும், உளறற் பேச்சுகளையும் தமிழெழுத்தால் எழுதியனவுமாகிய மாதிரிகள் (examples).

17. ஒலிகளின் நிகழ்த்தற் குறிப்புண்மையை, அதாவது, எவ்வெவ்வொலி எவ்வெவ்வியற்கை நிகழ்ச்சியைக் காட்டுகிறதென்பதை, தமிழர்கள் முற்றுமுணர்ந்ததினின்றே நிறைநாட்டு மந்திரவிலக்கணம் உண்டாயிருக்க வேண்டும். (மந்திர விலக்கணத்தால் பலனுளதிலதென்பது தற்போதைய கேள்வியன்று.)

18. ஒலிகளுக்கிட்டிருக்கும் பெயர்களே ஒலிகளின் நிகழ்த்தலிலக்கணம் தமிழில் வியக்கத்தக்க திருத்தமுடையதென்பதை உணர்த்துகின்றன. "ஆய்தம்" (தனிநிலை) என்னும் உயிர்ப்பொலியை அண்டமுழுதும் வழங்குகின்றது "உயிர்" என்னும் ஒலியை உயிருள்ளன யாவும் வழங்குகின்றன. "மெய்" என்னும் ஒலியை உயிரில்லன யாவும் வழங்குகின்றன. இம்மூன்றையும் மக்கட்பிறப்பினர் வழங்குகின்றனர்.

19. எந்த இயற்கைநிகழ்ச்சிகளை ஓர் ஒலி நிகழ்க்துகின்றதோ அது அவ்வொலியின் மந்திரப் பொருளோடு இணங்கி இருக்கின்றது.

20. உயிருள்ளன, இல்லன, மக்கள் என்னு மவற்றுள் எதனினின்று பிறக்கினும் ஒருவித ஒலி ஒருவித நிகழ்ச்சியையே நிகழ்த்துகின்றது. இது ஓர் பெரிய இயற்கை உண்மை (natural law.)

21. ஓர் விலங்கினத்தினது ஒலிப்பின் பொதுவிலக்கணமானது அவ்விலங்கினத்தின் தன்மையைப் பொதுப்பட நிகழ்த்துகின்றது.

22. மற்ற உயிருள்ளவற்றினைப் போலவே மக்கட் பிறப்பிற்கும் பொதுவான நிகழ்த்தற் குறிப்பொலிகள் (pathio-phones) இயற்கையில் இருக்கின்றன. அன்றியும் அவ்வொலிகள் மற்றவைகளின் நிகழ்த்தற் குறிப்பொலிகளைவிட மிகவும் விரிவானவை.



இம்மக்கட் பிறப்பினர் வழங்கும் பலவேறு மொழி (பாஷை)களுங்கூட இப்பொதுவான நிகழ்த்தற் குறிப்பொலிகளைச் சேர்த்து வழங்காவாயின் அவைகளுக்கு உயிர் (ஜீவன்) இல்லை.

23. எதனையேனும் வெகு திருத்தமாக உணர்த்த வேண்டியஅக்கரை யேற்படுகின்றபோது செயற்கை மொழிகள் (பாஷைகள்) தங்கள் செயற்கை விதிகளைப் பெரும்பாலும் உதறிவிட்டு இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகளை எடுத்தாளுகின்றன. அப்போது பேச்சாலுணர்த்தும் பொருள் (விஷயம்) பேசும்மொழி (பாஷை) யறியாதார்க்கும் புலப்படலாகின்றது.

24. ஒரு நாட்டவருடைய பொதுப்பான்மையை அவர்கள் வழங்கும் ஒலிகளின் தன்மை வெதுவாக வெளிப்படுத்துகின்றது.

25. ஓர் நாட்டவருடைய பொதுப்பான்மையில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்படின் அவைகட்கேற்ற ஒலி மாறுதல்களும் அவர்கள் மொழியில் (பாஷையில்) ஏற்படுகின்றன.

26. ஒரே மொழியே (பாஷையே) யாயினும் அதனை வழங்குபவர்களில் ஒருவனுடைய ஒலிப்போக்கானது அன்னவன் தன்மையை வெளியாக்குகின்றது.

27. மக்களின் ஒலிக்குறிகள் அவர்கள் வருந்தும் நோய்களைக்கூட இன்னவெனக் காட்டிக்கொடுத்து விடுகின்றன.

28. இயற்கை நிலைமையை வடிவுகள் உணர்த்து மிலக்கண வுண்மைகளோ நிகழ்ச்சியை ஒலிகள் உணர்த்து மிலக்கண வுண்மைகளை யொத்தவையே. இவ்விரண் டிலக்கணங்களுக்கும் தமிழெழுத்துக்கள் கட்டுப்பட்டிருக்கின்றன.

29. நிகழ்ச்சிக் குறிப்பொலிபாட்சியும் (pathio-phony) நிகழ்ச்சிக் குறிப்புருவியக்கமும் (pathio-farma) இன்றேல் அவைச்சொற்றிற (oratory) மென்பதென்னும்?

30. "எழுதிப்படிக்கும் சொற்றிறம் ஆவியற்றது" ("manuscript eloquence is lifeless") என்ற கடுஞ்சொல் ஆங்கில மொழிவரையில் மிகவும் உண்மையே. ஏனெனில் அம்மொழியின் பிறப்பு வளர்ப்பி லிதுகாறும் "நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணம்" என்னும் ஒன்றைக் கனவிலும் கண்டதில்லையாகலின் வேண்டுவனவாகிய நிகழ்ச்சிக் குறிப்பொலிகளை (pathio-phones) எழுதவேனும் அம்மொழியில் எழுத்துக்களில்லாமையால் பேசும்போதே சேர்த்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது.

31. "நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணத்தை" (pathio-phony) நன்குணர்ந்து பின்பற்றியே தமிழ்மொழி தோன்றி

யிருத்தலின் எழுதிப்படிக்கும் சொற்றிறமும் செந்தமிழில் நன்மை பயக்கும்.

32. நெடில் குறிலெழுத்துக்கள் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

33. உயிர்களும், மெய்களும், ஆய்தவொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

34. மிடற்றொலிகளும், நாவண்ணவொலிகளும், நாப்பல்லொலிகளும், இதழ்ப்பல்லொலிகளும், இதழொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன ?

35. வல்லொலியும், மெல்லொலியும், இடையொலியும், வாய்மூக்கொலிகளும் எத்தகைய நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றன?

36. இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலி வழக்கில் (in pathio-phones) மூச்சை விடும்போதாக்கு மொலிகளோடு மூச்சு இழுக்கும்போதாக்கு மொலிகளும் மிகவும் சிக்கனத்தோடும் பயனோடும் வழங்கப்படுகின்றன, ஆனால் செயற்கை மொழிகள் (பாஷைகள்) யாவும் இம்மூச்சிழுக்கும்போதா மொலிகளைப் புலனாக்கிக் கொள்ளவில்லை.

37. உயிர்ப்பொலிகள் (aspirants) மிகுத்துள்ள போதல்லாது மற்றபடி மூச்சுவிடும் போதாக்கும் குறிப்பொலிகள் எந் நிகழ்ச்சிகளை நிகழ்த்துகின்றனவோ அவைகளுக்கு நேரெதிரான நிகழ்ச்சிகளை மூச்சிழுக்கும் போதாக்கும் ஒத்த குறிப்பொலிகள் நிகழ்த்துகின்றன.

38. குசுகுசுவெனல், முறுமுறுத்தல், பொருமுதல், அதும்புதல், வீளையிடல், கூப்பாடுபோடுதல், அழுகை, உளறல், திக்கல், ஒலிவழுக்கல், அழுத்திப்பேசுதல், அளபெடுத்தல், மூக்காலழுதல் வாயொலிகளை மூக்கிற்பலுக்குதல், மூக்கொலிகளை வாயிற்பலுக்குதல், உயிர்மெய் யொலிகளை உயிர்ப்பொலியாக்குதல், ஒலிகளை விழுங்கிவிடுதல், அகாரம் பேசுதல், தாழ்குரல் பாடல், குரல் எடுத்துப்பாடல், ஒலிகளைத்தேய்த்து முடித்தல், விக்குள், கொட்டாவிவிடல், இருமல், ஏப்பம், வாந்தியொலி முதலாகிய இவைகளின் நிகழ்த்தற் குறிப்புக்களைத் திருத்தமாக தமிழ் எழுத்தின் தன்மை யிலக்கணத்தால் கண்டறிய வியல்கின்றது.

39. இனவுணர்ச்சி, அன்பு, காதல், மனநெகிழ்ச்சி, பொறாமை, சினம், மூர்க்கம், கடுஞ்சினம் அச்சம், விதிர்விதிர்ப்பு, துணுக்கம், காமம், களைப்பு, ஊக்கம், சோம்பல், பதற்றம், மனநிலையாமை, தாழ்மை, ஆணவம், கட்டளை, பணிவு, இழிப்பு, மதிப்பு, திடுக்கம், வெறுப்பு, மகிழ்ச்சி, கொண்டாட்டம், திகைப்பு, ஐயப்பாடு, தீர்மானம், பசி, வறட்சி, நினைத்தல், குறுகுறுத்தல், மனனம் செய்தல், பழிப்பு, குடித்தனம், பலவகையான நோயுழத்தல், நோயை யடக்கல், துன்பத்தை யடக்கல், நோய்க்கும் துன்பத்திற்கும் தளர்தல், படிப்படியான குடிமயக்கம், பலவேறு வகையான மயக்கம், முதலாகிய உணர்ச்சிகளை உணர்த்தும் இயற்கை யொலிகள் தமிழெழுத்துக்களின் ஒலித் தத்துவங்களுக் கிணக்கமாகவே யிருக்கின்றன.



40. தமிழ் எழுத்துக்களின் வடிவிலக்கணம் ஒன்றுமே இயற்கையுண்மை யாராய்வோர் ஆழ்ந்தறிதற்கேற்ற ஓர் பெரிய இயற்கை விலக்கணம் (natural science).

41. வடமொழியில் எகர ஒகரக் குற்றொலிகளில்லை. ஆனால் ஏனில்லை யென்பதைத் தமிழின் நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணத்திற்றான் றேடியறியவேண்டும்.

42 வடமொழியில் குற்றொலிகளைவிட நெட்டொலிகள் மொழியியற்கையினும் மிதம் மிஞ்சியிருக்கின்றன. ஆனால் ஏனப்படி யிருக்கின்றன வென்பதைத் தமிழின் நிகழ்ச்சிக் குறிப்பொலி யிலக்கணத்திற்றான் (in pathio-phony) தேடி யறிய வேண்டும்

43. உயிர்ப் பெழுத்துக்களும் (aspirants) உயிர்ப்பித்த மெய்யெழுத்துக்களும் (voiced consonants) வடமொழியில் அதிகமாக இருக்கின்றன, ஆனால் அவைகளின் நிகழ்த்தற் குறிப் பருமையை (pathio-phonetic importance) தமிழிலிருந்து அறியவேண்டும்.

44. வடமொழி யெழுத்துக்களை முற்றிலும் ஒலிமுறையிலக்கணப்படி (phonology) யமைக்காததனுண்மையைத தமிழின் மந்திர விலக்கணத்தினின்றும் எடுத்தறிய வேண்டியிருக்கின்றது.

45. வடமொழியின் பெருமையை அம்மொழியிலிருக்கும் ஒலிகளைக் காட்டினும் இல்லா ஒலிகளே மிக்க சொல்வன்மையோடு உணர்த்துகின்றன. அவ்வில்லா வொலிகள் யாவும் தமிழில் தான் இருக்கின்றன.

46. நிகழ்த்தற் குறிப்பொலி (pathio-phony) யுண்மைப்படி கற்றோர் மற்றோர் யாவர்க்கும் பொது வழக்கில் வடமொழி இருக்க இயலாதது. ஆகையால் அம்மொழியை இறந்தமொழி யென்பது ஓர் பெருந்தவறு.

47. வடமொழி தென்மொழியெனு மிவ்விரண்டும் கதிரும் ஞாயிறும் போல்வன என்னலாம். வேறு விதமாகச் சொல்லின்

தென்மொழியை "அறியத்தகுவது" எனவும் வடமொழியை "அறிவு" எனவும் தரும்.

48. மந்திரப் பொருளிற்காகவந்த வடமொழியானது உண்மையான பார்ப்பார் அதாவது பிராமணரிடத்து இறப்பு நிகழ்வு எதிர்வெனு முக்காலத்தினு முளதேயாகும்.

49. வடமொழியின் ஒப்பிலா மந்திரப் பொருட்பெருமையைத் தமிழ்ப்படிப்பின்றி நன்குணரவாவது நுகரவாவது இயலாதாகலின் எவ்வித வடமொழிப்படிப்பினோடும் தென்மொழிப்படிப்பை கட்டாயமாக்க வேண்டியது இன்றியமையாதது.

50. எல்லாமொழிக்கும் பொதுவான செந்தமிழொலி யிலக்கணத்தை எம்மொழி பயில்வோர்க்கும் கட்டாயபாடமாக வாக்கின் மிக்க நன்மை யீனும்.

51. தமிழ்மொழியினூடே யமைந்து கிடக்கும் இயற்கை யிலக்கணத்தைக் கட்டாயபாடமாக எல்லா வியற்கையிலக்கணங் கற்கு மாணவர்களுக்கும் (students of philosophy) வைக்கின் நலமுண்டு.

52. மேல்நாட்டாருக்கு இற்றைக்கும் தெரியாத சீழ்கண்டவையும் இன்னும் பல இயற்கை யுண்மை நூல்களும் (natural sciences) தமிழில் இருந்திருக்க வேண்டுமென்று இயற்கை யுண்மையடங்கிய (philosophic) தமிழிலக்கணத்தால் விளங்குகின்றது. அவை, முப்பொருளுண்மை யிலக்கணம், பரமுளையிலக்கணம், உயிர்முளையிலக்கணம், மரமுளையிலக்கணம், பண்டமுளையிலக்கணம், பரவிலக்கணம், பரவடிவிலக்கணம், பரவொலியிலக்கணம், ஒலியிலக்கணம், ஒலிநிகழ்ச்சியிலக்கணம், வடிவியற்கையிலக்கணம், வரியிலக்கணம், பொருட்டன்மை யுயிரிலக்கணம், வடிவளவையிலக்கணம் ஒலியளவையிலக்கணம், உயிர்ப்பிலக்கணம் முதலானவை.

53. சென்னைக் பல்கலைக்கழகத்தினர் (The Madras University) தமிழ்மொழியைப் புறக்கணித்ததனால் தங்கட்குத் தாங்களே தீங்கிழைத்துக்கொண்டதுமன்றி தமிழ்மொழியாகிய செல்வத்தில் பொது உரிமையுடைய உலகத்தினர் மற்றையர்க்கும் தீங்கிழைத்தவராகின்றனர். ஆகலின் முதன்மையாகத் தமிழரும் அவர்களையன்றி கல்வியறிவென்பதில் நன்கு மதிப்புடைய எல்லோரும் அத்தமிழ்மொழிச் செல்வத்தைத் தாங்களடையவும் உலகின் மற்றையோரும் ஒக்க அடையவும் வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்களாவர்.



54. "தமிழ்க் பல்கலைக்கழகம்" (Tamil University) ஒன்று நிறுவுவது விரைவாகவும் கட்டாயமாகவும் வேண்டியது.

55. ஓர் குறுநிலத்திற்கோ, ஓர் நாட்டிற்கோ, அல்லது உலகிற்கேயோ ஓர் மொழியைப் (பாஷையை) பொது மொழியாக்குவது எப்போதும் ஆட்சி வலிமையின் பிடியைப் பற்றியதேயொழிய மற்றெம்மொழியின் சிறப்பைப் பற்றியது மன்று.

56. எண்ணிலக்கணம் (கணிதம்) முதலான வரைபிறழாக் கொள்கைகளை யுடைய இலக்கணங்களைப்போல (sciences of precision) உலகிற்குப் பொது எழுத்தென்பது ஆட்சி வலியின் பிடிக்குச் சிக்காத நுண்ணிய வியற்கையை யுடையது.

57. உண்மையிலக்கணப் பான்மையும் (scientific) எம்மொழிக்கும் பொதுப்பான்மையும் (universal) உடைய்து தமிழொலி யெழுத்தமைப்பொன்றே யாகையால் அதை உலக மேற்றுக்கொள்ளப்படுவதில் ஐயமில்லை.

58. உலகமொழிகளி யாவற்றையும் எழுதக்கூடிய கையச்சுக்கருவிக்கு (type writer) செந்தமிழெழுத்துக்களை யமைப்பின் இப்போது ஆங்கில மொன்றை எழுத இருக்கும் கருவியினும் சிறியதும் எளியதுமாக அமைகின்றது.

59. தமிழொலியிலக்கணத்தில் நல்லுணர்விலரே யாயினும் சரி, முற்றும் ஐயப்பாடுடைய இயல்பினராயினும் சரியே அத்தமிழொலியிலக்கணத்தோடு வழக்கிட்டு அவ்வழக்கிடும் முயற்சியிலேயே உலக மொழிகள் யாவற்றினுடைய ஒலிகளையும் இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகள் பெரும்பான்மையையும் ஆளக்கூடிய வல்லமையை இத்தமிழொலியிலக்கணப் பயிற்சியால் மூன்று மணி நேரகாலத்திற்கு மேலும் தங்களுக்கு வரப்பெறுதிருக்க வல்லீராவென்று சிறிது உங்கள் வலுவை அதில் செலுத்திப் பார்த்தறியுங்களென்று எல்லா வொலியிலக்கணக்காரர்களும் மிகவும் ஆர்வத்தோடு அழைக்கப்படுகின்றனர்.

60. தமிழ்க்கல்வியின் பெறுமானத்திற்கேற்ப அதனில் உலகத்தார் மனம் செலுத்தச் செய்யவும் தமிழொலி யிலக்கணத்தை விரைவாக எல்லோரும் ஏற்கச்செய்யவும் வேண்டிய நடவடிக்கைகள் வருமாறு:—

(a) தமிழொலி யிலக்கணத்திற்காக அச்சுக்கூடமொன்று நிறுவுதல், எல்லா முதன்மையான மொழிகளிலும் தமிழொலி யிலக்கணத்தை வெளியாக்குதல், பொதுத் தமிழெழுத்தில். மற்றைய மொழிகளின் முதன்மையான நூல்களை எழுதி வெளியாக்குதல், இந்தப் பொதுத் தமிழெழுத்தில் நிகழ்ச்சிக் குறிப்



19965

பொலிகளையும் உளறலொலிகளையும் எழுதி வெளியாக்குதல். இயற்கை நிகழ்ச்சிக் குறிப்பொலிகளையும் எல்லா மொழிகளையும், வழங்கும்படியான ஒருமுறைபதிப்பு (journal) வெளியாக்குதல் முதலியன.

(b) பொதுத் தமிழொலி யிலக்கணம் உலகம் முழுவதும் உடனே கிடைக்கும்படிக்கும் ஒலிகள் நிலையாகப் பதிவுசெய்யப் படும்படிக்குமாக, அவ்விலக்கணத்தை ஒலிக்கருவியில் (gramaphone) அகப்படுத்தி வெளியாக்கல்.

(c) இவ்வொலியிலக்கணப் பொருளை உலகி லெவ்விடத்தும் சென்று எடுத்துரைக்க கூட்டங்கள் தயாரித்தல்.

(d) தமிழில் இயற்கை நிகழ்ச்சிக்குறிப்பொலி யிலக்கணம் உயர்நிலைமையுற்றிருந்த தென்பதை யுணர்த்தும் வண்ணம், ஒருவித மொழியையும் (பாஷையையும்) வழங்காமல் இயற்கை நிகழ்ச்சிக்குறிப் பொலிகளைக்கொண்டே சிறுகூத்த நூற்கள் இயற்றுதல்; அதனை ஆடிக்காட்ட கூத்தர்களைப் பயிற்றல்.

(e) இன்னும் சான்றோர் எடுத்துச் சொல்லும் வேறு முயற்சிகள்.

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலந்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(முன் ௨௪௯-ம் பக்கத் தொடர்ச்சி)

### குறிஞ்சி

தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழி தலைமகள் இயற்பட மொழிந்தது.

களவொழுக்கத்தில் புணர்ந்து பிரிந்த தலைமகன், தலைவி தோழியர்களின் செய்திகளை அறியச் சிறைப்புறமாக நின்றானாக, அதனை அறிந்த தோழி வருந்தும் தலைவியை நோக்கி, அவன் விரைவில் வந்து மணந்துகொள்ள வேண்டி, அத்தலைமகன் கொடுமைகளைச் சொல்லிப் பழிக்கத் தலைவி அவனிடத்துக்கொண்ட அன்பினால் அதனைப் பொறாது தலைவன் குணத்தைக் கொண்டாடிக் கூறியது இச்செய்யுள்.



### தேவகுலத்தார் பாடியது

3. நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே.

பதவுரை:— சாரல்—மலைச்சாரலாகிய தாழ்வரையிலே; கரும்கோல் குறிஞ்சி பூ கொண்டு—கரியதாளையுடைய குறிஞ்சிப் பூவின் தேனைக்கொண்டு; பெருந்தேன் இழைக்கும்—வண்டுகள் பெரிய பெரிய தேனிறாலைச் செய்கின்ற; நாடனொடு நட்பு—நாட்டை யுடையவனாகிய தலைவனுக்கு என்னிடத்து உள்ளதாகிய நட்பு; நிலத்தினும் பெரிதே—நிலத்தைக் காட்டிலும் பெரிது; வானினும் உயர்ந்தன்று—தேவலோகத்தினும் உயர்ந்தது; நீரினும் ஆர்அளவின்று—கடலைக் காட்டிலும் அளவிடற்கரிய ஆழத்தை யுடையது.

வான்—ஆகுபெயர். உயர்ந்தன்று—உயர்ந்தது; அளவின்று—அளவை யுடையது. அன், இன்—சாரியைகள்; ஆர்அளவு—அரிய அளவு, கருங்கோல்—வலியதண்டு, கொம்புமாம்; கருமை—வலிமை. பூக்கொண்டு—பூவிலுள்ள தேனைக்கொண்டு; ஏழாம் வேற்றுமைத்தொகை; தேன்—தேனிறால், தேன்கூடு; இழைக்கு நாடு—இடத்தில் நிகழும் வண்டின்தொழில் இடத்தின்மேல் ஏற்றிக்கூறப்பட்டது. நாடனொடு நட்பு—நாடனிடத்துள்ள நட்பு; உருபுமயக்கம். நாடனொடு—ஒடு—இசைநிறை எனலுமாம்.

இறைச்சி:—"சாரல் கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடன்" என்றதனால், வண்டுகள் அற்பமான குறிஞ்சிப் பூக்களிடமுள்ள தேனைச் சிறிது சிறிதாகப் பன்னாட்கொண்டு முடிவில் பெருந் தேன்கூட்டைச் சமைப்பது போல இப்பொழுது என்னுடன்கூடி இன்புறும் சாரக்கிராகியான தலைவனுடைய வழி முறையாற் பெருகற் பாலதாகிய சிறுமையை யுடைய நட்பு நாளடைவில் பெருகி முதிர்ந்து இடையறாத இன்பந்துய்க்கும் நன்மணமாய் இறுதியில் முடியும் என்பது திண்ணம்; என்னெனில், என்னிடத்துத் தலைவற்குள்ள அன்பு (நிலத்தினும் பெரிது; வானினுமுயர்ந்தது; கடலினும் அளவிடற்கரிய ஆழமுடையது) அகற்சி, உயரம், ஆழம் இவற்றை முற்ற உடைமையான் என்க.

### மேற்கோள் விளக்கம்

1. "நிலத்தினும்......நட்பே"—"இஃது ஈற்றயலடி முச்சீரடியால் வந்தமையால் நேரிசை யாசிரியப்பா.

—(யாப்பு—காரிகை 92 பக்.)—(யாப்பருங்கலம்—பக். 256)

2. "நிலத்தினும்......நட்பே"—"இஃது அன்பில் என்பதற்கு நிறுத்தற்கட் கூறியது" —(தோல்காப்பியம்—கற்பு—643 பக்.)

3. 'நிலத்தினும் பெரிது' — "ஞாலத்தின் மாணப்பெரிது" —குறள்

4. "நிலத்தினும்......நட்பே"—என ஆசிரியப்பா அளவடியான் வந்தது. —(யாப்பருங்கலம் பக்கம் 111)

5. "நிலத்தினும்......நட்பே"
—(தோல்—களவு 145-சூ. இளம்பூ உரை மேற்கோள் பக்கம் 237)

6. "நிலத்தினும்......நட்பே" —"என்றவழி நாட்டிற் கடையாகிய குறிஞ்சிப்பூவுந் தேனும் இறைச்சிப் பொருள் என்று கொள்க" என்பது "இறைச்சிதானே யுரிப்புறத்ததுவே".
—(தோல்காப்பியம்-பொருளியல் 225-சூ. உரைமேற்கோள்)

7. "நிலத்தினும்......நட்பே"—"என்பது பெருமை வியப்பு. என்னை? கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறை முறையால் பெருகற் பாலதாகிய நட்பு மற்றவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தின தகலம் போலவும் ஒருகாலே பெருகிற் றென்றமையின் இது தன்கட் டோன்றிய பெருமை வியப்பு. இது தலைமகன் கருத்தினை நட்பிற்குங் கொள்ளுங்காற் பிறன்கட் டோன்றிய பெருமை வியப்பாம் என்பது கொள்க"—
—(தோல்காப்பியம்—மெய்ப்பாட்டியல் பக். 16)

8. கருமை—வலிமை—"கருங்கைக் கொல்லன்"—(புறம் 21-7)

9. கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேனிழைக்கும் நாடனொடு நட்பு"—"என்றவழி மைவரை யுலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்ததாகலானும்"
—(தோல்காப்பியம்—அகத்திணை சூ 5. இளம்பூரணம்)

10. "கருங்கோற் குறிஞ்சி":—
"கருங்கோல் குறிஞ்சி யடுக்கம் பாட" —(புறம் 374-8)
"கருங்கோன் குறிஞ்சி மதனில் வான்பூ" —(நற் 268-3)
"பெருங்கோல் குறிஞ்சி" —(நற் 301-1)
"கருங்கோல் குறிஞ்சி" —(அகம் 308-16)
"கருங்காற் குறிஞ்சி" —(மதுரைக்காஞ்சி 300)

11. "கருங்காற் குறிஞ்சி"—கரிய அடியையுடைய குறிஞ்சி மரம்.

"கருங்காற் குறிஞ்சியும் கடிநாள் வேங்கையும்"
—(பெருங்கதை 1-50-26)

மெய்ப்பாடு—பெருமைபற்றிய வியப்பு என்னை?

"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"—(தோல்-மெய்ப். 7)

என்பாராகலின்.

பயன்:—இயற்பட மொழிதல்.

---



## நெய்தல்

பிரிவிடை ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி யுரைத்தது. அதாவது; தலைமகன் பிரிவிடைத் தலைமகள் அப்பிரிவை ஆற்றாள் என்று கவன்ற தோழிக்குத் தலைமகள் தனது ஆற்றாமை தோன்றக் கூறியது.

காமஞ்சேர் குளத்தார் பாடியது

4. நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
இமைதீப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவில ராகுத னோமென் னெஞ்சே.

பதவுரை:—என்நெஞ்சுநோம்—எனது உள்ளம் வருந்தும், என் நெஞ்சுநோம்—எனது உள்ளம் வருந்தும்; இமை தீப்பு அன்ன கண்நீர் தாங்கி—(முன் என்னிடத்து அன்பு பொருந்தி யிருந்த காதலர் இப்பொழுது பிரிதலால்) இமை தீய்ப்பதை ஒப்ப வெப்பம்மிகுந்த கண்ணீரை மிகத் தாங்கி, அமைதற்கு அமைந்த நம் காதலர்—இங்கு அன்போடு பொருந்தி இருத்தற்குத் தகுந்த நம் தலைவர்; அமைவிலர் ஆகுதல்—நான் வருந்தும்படி அன்புபொருந்தியிராததைக் குறித்து; என் நெஞ்சு நோம்—எனது உள்ளம் வருந்தும்.

நோகும் — நோம் — இடைக்குறை. பிரிதலைக் குறித்து இரங்கல் ஆதலின் நெய்தற்றிணை. இமைதீப்பன்ன — இமை தீய்ப்பன்ன—பிரதிபேதம்.

1. "இமைதீப்பன்ன கண்ணீர் தாங்கி"—
"உண் கண், நீரொடு" —(குறுந்-38)

2. "நோமென் னெஞ்சே...நோமென் னெஞ்சே"—
"முனிவு மெய்ந்நிறுத்தற்கு மேற்கோள்"
—(தோல்-களவு இளம்பூ-பக். 179)

3. "நோமென் னெஞ்சே..................நோமென் னெஞ்சே
..........................................................................................
..................அமைவிலராகுதல் நோமென் னெஞ்சே" என மும்முறை கூறினாள் ஆற்றாமை தோன்ற. இலக்கணமின்மை நோக்கி இதற்குமேல் சொற்றாளில்லை.

'தாங்கி' என்பது கண்ணீரின் மிகுதியைக் காட்டிற்று. 'காதலர்'—காதலியார் எனப்பொருள்தருதலின் குறிப்பு மொழி.

மெய்ப்பாடு:-தன்னிடம்கண்ட அசைவுபற்றிய அழுகை. என்னை?

"இளிவே யிழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே" —(தோல். மெய்ப் 5.)

என்பாராகலின்

பயன்:—ஆற்றாமை அறிவித்தல். அதுவும் ஆற்றுதலைப் பயக்கும். என்னை? உள்ள வருத்தம் உரைக்கக் குறையுமாதலின்.

# அறிவியற் பகுதி - Science

## உளநூல் (Psychology)

[திரு. மா. பாலசுப்பிரமணியம், எம். ஏ.]

### உட்பாட்டியல்

(சிலம்பு ௧௨—பரல் ௧௨—௫௫௰-ம் பக்கத் தொடர்ச்சி)

### புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை
### (The Sex-Complex)

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை மூன்று சார்புகளால் ஆக்கப்பட்டது. அவை: 1. உடல் தொடர்பு விழைவு, 2. உள்ளத்தொடர்பு விழைவு, 3. புணர்ச்சிப் பயன் விழைவு என்பன. தலைப்பட்ட புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையில் இவை மூன்றும் முழுதும் இயங்கி நிற்கும். சில நிலைமைகளில் உடல் தொடர்பு விழைவின்றி உள்ளத் தொடர்பு விழைவு ஒன்றே இயங்கும். இதனை, ஆங்கிலத்தில் ப்ளேடானிக் ப்ரேண்ட்ஷிப் (Platonic Friendship) என்பர். ஒரு மனைவி பிறனொருவனை விரும்புகின்றாள்; ஆனால் அவனுடன் உடற் புணர்ச்சிகொள்ள விரும்பவில்லை, தன் கணவனிடத்து உடற் புணர்ச்சியின்பம் பெறுகின்றாளாதலின். இந்நிலைமை ப்ளேடானிக் ப்ரேண்ட்ஷிப் என்பதன் சிறந்த எடுத்துக் காட்டாம்

புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமை, பெண்பாலாரிடத்து, காமக் காலம் தொடங்கி குழவி கருவினுள் முதிருங்காலம் வரை நீடித்து நிற்கும். ஆண்பாலாரிடத்து இது மிகச் சிறிய காலமே நிற்கும்.

எந்தக் கணவன் மனைவியருடைய உடல் நிலையினையும் உள்ளநிலையினையும் ஒத்திருக்கின்றனவோ, அவர்களுடைய வாழ்க்கை சிறந்து விளங்கும்.

இனி, புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமையின் சில வியத்தக்க உண்மைகளை ஆராய்வோம்.

1. ஒருவன் தன் மனைவி மக்கள்பால் ஆழ்ந்த அன்பினனாகவே யிருப்பன். இருப்பினும், காமக் கிழத்தியருடன் கூடி வாழவும் விழைவன். காமக்கிழத்தியர்பால் அவன் கொண்டுள்ள



அன்பு, மனைவி மக்கள்பால் அவன் கொண்டுள்ள அன்பினொடு முரண்படாது. இவ்வுள்ள வியல்பு பெண்பாலார்பால் மிகுதியாகக் காணப்படுவதில்லை.

2. சிலர்க்குப் புணர்ச்சி விழைவு மிகைப்பட்ட அளவில் எழுவதில்லை. எனினும் அவர்கள் தம் மனைவியரை விடுத்து, பழகியறியா புறப்பெண்டிரிடம் கூடியொழுக விழைகின்றனர். நெருங்கிப்பழகிய மனைவியர்பால் அவர்கள் பெறும் புணர்ச்சி இன்பம் பழகியறியாப் புறப்பெண்டிர் உறவால் பெறும் இன்பத்திற்கு மிகவும் குறைபட்டிருத்தலின், அவர்கள் பின்னவரின் புணர்ச்சிப்புதுஇன்பத்தையே விழைகின்றனர். எனினும் அன்னவர் தம் மனைவியரைப் பிரிந்து செல்ல ஒருப்படுவாரல்லர்.

3. ஒரு மனைவி தன் கணவனிடத்தே உள்ளன்பு கொண்டிலள் எனினும் அவனுடன் கூடியே வாழ்வாள். தற்கால மனைவியருள் பலர் இந்நிலையில் இருக்கின்றனர்.

4. சில மனைவியர் கட்டழியா இளமையினராக விருப்பினும், தம்முடைய மக்கள்பால் கொண்ட அன்பால், தம் கணவர் தம்மால் விரும்பப்படாதவரெனினும், அவர்களைப் பிரிந்து செல்ல உடன்படுவதில்லை.

மேற் குறிப்பிட்ட நான்கு உண்மைகளால் நமக்குப் புலனாவதொன்றுண்டு. அது புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையின் பல திறப்பட்ட தன்மையேயாம். புணர்ச்சி விழைவு ஒருவனுக்காதல் ஒருத்திக்காதல் மிக்கெழினும் பிறசார்புகளால் அது அடங்கிவிடும் என்பதும் ஈண்டு உணர்தற்பாற்று.

இனி, மேலும் சில உண்மைகளை ஆராய்வோம்.

1. காம ஆற்றலும் காம இச்சையும் மிகுதியிற் கொண்டவர்கள் வேறுதுறைகளில் தம் உளவன்மையைச் செலுத்துவராயின் அவ்வாற்றலால் ஆம் உடல் துன்பத்தையும், அவ்விச்சையாலாம் உள்ளத் துன்பத்தையும் நுகராதொழிவர். எனினும் இது பலர்க்கும் இயல்வதன்று. காமஇச்சையும் காமவன்மையும் கழியப்பெறாது நிறைவுற்று நிற்பவர் அவைகளால், பகற் கனவு, மனமாற்றம் முதலிய நிலைகளில் உழன்று துன்புறுவர்.

2. ஆண்பாலாருள் சிலர் தம் வாழ்க்கையில் எவ்வகையாலும் காமவிழைவின் எழுச்சி யின்றியே வாழ்கின்றனர். அற்றே, பெண்பாலாருள் சிலரும் தம் வாழ்க்கையில் எவ்வகைப்பட்ட காமவிழைவும் எழுதலின்றி வாழ்கின்றனர். இஃது இவர்க்கு இயல்வது, காமவிழைவினையும் காமவன்மையினையும்

அடக்கி வேறு துறைகளில் செலுத்தும் விழைவாலும் வன்மையாலுமேயாம். அன்றியும். 'கசடறக்கற்று' உடலின் தன்மை நுணுக்கங்களைத் தெரிந்து, உளவியல்பினையும் செயல்களையும் நன்கு அறிந்து, புலனடக்கம், கரணவடக்கம் முதலிய சீரிய பழக்கங்களை மேற்கொண்டு நிற்பார்க்குப் புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளும், புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையும் தோன்றுவனவாகா.

3. சில வாலிபர்கள் தம் தோழர்களைக் கட்டியணைத்து முத்தமிடுவதும், சில பருவமங்கையர் தம் தோழிகளைக் கட்டியணைத்து முத்தமிடுவதும், இந்நாள், காணப்படுகின்றன. இவை புணர்ச்சிச் சார்புக்கூட்டு நிலைமையின்பாற்பட்ட தவறான ஒழுக்கங்களேயாம். ஆங்கிலத்தில் இவைகளை ஹோமோ ஸெக்ஷுவல் மேனிபெஸ்டேஷன்ஸ் (Homosexual Manifestations) என்பர். தமிழ்மொழியில் இவைகளை ஓரினப்புணர்ச்சி விழைவெழுச்சிகள் எனக்கூறலாம். சில உளநூற் புலவர், ஒவ்வொருவருடைய உள்ளத்தும் ஓரினப்புணர்ச்சிச் சார்புப்பகுதி (Homosexual Component) உண்டு எனக்கூறுகின்றனர். இப்பகுதி, குழவிப்பருவப் புணர்ச்சிவிழைவின் (Sexuatity of the childhood) பின்னிலையாம் (Remnant) எனவும் அவர் கொள்ளுகின்றனர்.

4. சில ஆடவர்கள் குழவிகளை மார்பில் அணைத்து உச்சி மோந்து முத்தமிட விழைகின்றனர். அற்றே சில மடந்தையரும் விழைகின்றனர். உளநூற்புலவர் சிலர் இதனைப் புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளில் ஒன்றாகக்கொள்வர். தம் வெற்றுடல் மேல் தம் குழவிகளின் வெற்றுடல் (ஆடையில்லாமல்) பதிய அணைத்துத்தழுவி முத்தமிட விழைகின்றனர் சிலர். இஃதும் குற்றமற்ற புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளில் ஒன்றும் எனக் கொள்வர் சில உளநூற்புலவர். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்னும் வள்ளுவர் கொள்கை ஈண்டு உன்னற்பாற்று. வள்ளுவர் மொழிந்தது மக்களிடை நிகழும் ஒரு குற்றமற்ற வியல்பினை.

புணர்ச்சிச் சார்பின் உட்பாடுகளையும் புணர்ச்சிச் சார்புக் கூட்டு நிலைமைகளையும் விளக்க மேலும் பல எடுத்துக்காட்டுக்களை மொழியலாம், விரிப்பின் பெருகும் என விடுத்தாம்.

---

# மொழிபெயர்ப்பு-Translation

[Mr. T .B. KRISHNASWAMY MUDALIAR, M. A. B. L., L. T.]

மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய

## கார் நாற்பது

### சிறப்புப்பாயிரம்

முல்லைக் கொடிமகிழ மொய்குழலா ருண்மகிழ
மெல்லப் புனல்பொழியு மின்னெழிற்கார்—தொல்லைநூல்
வல்லா ருளமகிழத் தீந்தமிழை வார்க்குமே
சொல்லாய்ந்த கூத்தர்கார் சூழ்ந்து.

## IN RAINY SEASON : FORTY (STANZAS)

BY

KANNAN KUTHTHANAR

*Being forty poems dealing with the emotions of lovers parted and expecting to meet each other with the fall of rains and the cessation of wars.*

(தோழி தலைமகட்குப் பருவங் காட்டி வற்புறுத்தது)

பொருகடல் வண்ணன் புனைமார்பிற் றார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெய லாழ
வருது மெனமொழிந்தார் வாரார்கொல் வானங்
கருவிருந் தாலிக்கும் போழ்து. (௧)

THE MAID SPEAKS TO HER MISTRESS.

" When like the garland on the chest of Vishnu, the Lord coloured as the dashing waves of ocean, lies the Rainbow in the sky and the sweet showers fall, I shall come" so said our lord. Now that the skies are dark and pour down rain, will he not come? (1)

கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வ மெய்த
நெடுங்காடு நேர்சினை யீனக்—கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென் றெழில்வான
மின்னு மவர்தூ துரைத்து. (௨)

Sunshine growing less, the showers growing plentiful, and the length of the forest yielding its wealth of flowers, O wearer of the bent ear-ornament, the beautiful sky lightens with the message of his instant coming! (2)

வரிநிறப் பாதிரி வாட வளிபோழ்ந்
தயிர்மணற் றண்புறவி னாலி—புரள
உருமிடி வான மிழிய வெழுமே
நெருந லொருத்தி திறத்து. (௩)

The striped flower of the Padri is fading; hailstones are rolling on the soft sand in the cool forest cut through by storms; and the thunder-cloud is pouring its showers since yesterday to pain one poor solitary woman. (3)

ஆடு மகளிரின் மஞ்ஞை யணிகொளக்
காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன
பாடுவண் டூதும் பருவம் பணைத்தோளி
வாடும் பசலை மருந்து. (௪)

The peacocks are lovely as women that dance; the forests are aglow with the Cassia bloom; the singing beetles blow music through the flowers; O thou, with shoulders like the bamboo, this season shall bring balm to thy love-longing. (4)

இகழுநர் சொல்லஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோ லுண்கண்ணாய் பொய்யன்மை யீண்டைப்
பவழஞ் சிதறி யவைபோலக் கோபந்
தவழுந் தகைய புறவு. (௫)

O thou, with arrow-like sharp eyes, that have fed on collyrium, here are forests with scarlet insects like corals scattered. Sure he will return now who fearing derision fared forth to seek a fortune. (5)



தொடியிட வாற்றா தொலைந்ததோ ணோக்கி
வடுவிடைப் போழ்ந்தகன்ற கண்ணாய் வருந்தல்
கடிதிடி வான முரறு நெடுவிடைச்
சென்றாரை நீடன்மி னென்று. (௬)

The frightful thunder-cloud roars to those on a long journey "Tarry no longer"; therefore, Oh thou, with large eyes, like the split tender mango, grieve not, looking at my arms grown too thin even to wear golden bracelets. (6)

நச்சியார்க் கீதலு நண்ணார்த் தெறுதலுந்
தற்செய்வான் சென்றார்த் தரூஉந் தளரியலாய்
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரு மின்னு மழை. (௭)

Like the ever-tended, never forgotten sacrificial fire, the lightning flashes everywhere and rain falls; therefore O weary one, he will soon come back to thee who went forth to seek a fortune to help friends, to fight enemies and to maintain his self-respect. (7)

மண்ணியன் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்ணிய னல்லாய் பிரிந்தார் வரல்கூறும்
கண்ணிய லஞ்சனந் தோய்ந்தபோற் காயாவும்
நுண்ணரும் பூழ்த்த புறவு. (௮)

O most feminine of women, the collyrium-dark flowers of the *Kaya* filling the forests, declare the return of him who left you, seeking a fortune to establish his fame on earth. (8)

கருவிளை கண்மலர்போற் பூத்தன கார்க்கேற்
றெரிவனப் புற்றன தோன்றி—வரிவளை
முன்கை யிறப்பத் துறந்தார் வரல்கூறும்
இன்சொற் பலவு முரைத்து. (௯)

The eye-like flowers of the black *vilai* and the red flame-like flowers of the *thonri* have blossomed, indicating with many sweet words the return of him, whose departure made the striped bangles slip down the slender forearm. (9)

புணர்தரு செல்வந் தருபாக்குச் சென்றார்
ஆனேற் றொருத்த லதனொ டெதிர்செறுப்பக்
கான்யாற் றொலியிற் கடுமான்றே ரென்றோழி
மேனி தளிர்ப்ப வரும். (௰)

Oh my companion, taking the thunder to be the growl of the bull of heaven, the sturdy buffalo enraged opposes itself to it; The car of the lord drawn by fast-running steeds comes sounding like a forest-river to make thy body regain its lustre. (10)

---

# மதிப்புரை

**தமிழ்நாடும் நம்மாழ்வாரும்** :—விலை அணா எட்டு. கிடைக்குமிடம் முருகவேள் புத்தகசாலை நெ. 12, கணபதி முதலி தெரு. இராயப்பேட்டை, சென்னை.

அழகிய இச்சிறு நூல் திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதியச்சிட்ட ஆராய்ச்சிக் கட்டுரையாகும். இதன் இரண்டாம் பதிப்புப் பிரதி எம் பார்வைக்கு வந்துளது. எளிய இனிய கொழுவிய தமிழில் கட்டுரை யெழுதுவதில் திரு. முதலியாரவர்கள் மிகவுஞ் சிறந்தவர் என்பதைத் தமிழ்நாடு நன்கறியும். வைணவ ஆழ்வார்களிற் றலையாய ஒருவர் பெருமையைத் தீர்ந்த சைவராகிய திரு. முதலியாரவர்கள் எட்டுணையும் வெறுப்பின்றிப் புகழ்ந்துள்ளமையைத் தமிழ் மக்கள் இந்நூற்கண் கண்டு மகிழ்வார்கள்.

**அபிமன்யு** :—விலை அணா எட்டு. வெங்களத்தூர் திரு. சாமிநாத சர்மா இயற்றியது. கிடைக்குமிடம் வசந்தாலயம், மாம்பலம் சென்னை.

பழமையிற் புதுமை பொலிய வேண்டும் என்ற அவாவுடன் பண்டைய காவியமாகிய பாரதத்தின் ஒரு பகுதியைப் புதிய ஆடையணிவித்து நாடக உருவில், இனிய தமிழிற் படிப்போர்க்குப் புத்துணர்ச்சி பிறக்குமாறு சுவையுடன் நூலாசிரியர் எழுதியுள்ளது போற்றத் தகுந்ததாம். இந்நாடகம் நடிப்பதற்கு மிகவும் ஏற்ற தொன்றாகும்.

# கவின்கலைப் பகுதி - Fine arts

மகேந்திரவர்மன் வடமொழியில் இயற்றிய

## மத்த விலாசம்

### களிக்கூத்து

[திரு. தி. கி. கு. நாராயணசாமி நாயுடு அவர்கள்]

(முன் ௯௨-ம் பக்கத் தொடர்ச்சி)

### நான்காம் களம்

(பித்தன் வருகிறான்)

பித்தன்:—அதோ! அதோ! அந்தக் கொடிய நாய்! வதக்கின மாமிசம் நிறைந்த ஒரு மண்டை ஓட்டை, எங்கேயோ பொறுக்கிக் கொண்டா ஓடுகிறாய்? அதோ பார்! அந்த வோட்டைக் கீழே போட்டுவிட்டு அந்நாய் என்னைத் தின்பதற்காக ஓடி வருகிறது. (சுற்றுமுற்றும் பார்க்கிறான்) இந்தக் கல்லால் அதன் பல்லை உடைக்கிறேன் பார். ஆஹா! ஓட்டைப் போட்டு விட்டு ஓடுகிறாயா பைத்தியங்கொள்ளி நாயே! என் தைரியத்தைப் பார்த்து உனக்கு என்மேல் கோபமா? நாட்டுப் பன்றியின் மேல் ஏறிகிட்டு சமுத்திரம் என்ன செஞ்சிதா, மானத்து மேலே குதிச்சி ராவணனை அடிச்சி, தள்ளி, சகரமகன் திமிங்கிலத்தைப் பிடிச்சிகிட்டு ஓடியாந்துடுச்சா? ஓ! ஓகோ! ஏ! எருக்கஞ் செடி! நீ என்ன சொல்றே? பொய், பொயிண்ணு? இந்த உலக்கை கையும் காலு மிருக்கிற தலை தான் எனக்கு சாக்ஷி. மூன்று லோகத்திலும் என் வல்லமை தெரிஞ்சிருக்கா? எனக்கு சாக்ஷியும் வேணுமா?—அதான் நான் செய்யப் போறேன். அதோ அந்த நாய் திண்ணுட்டு மீதி வைச்சிருக்கிற கறி துண்டை நான் திங்க போறேன். (அதைத்தின்று பயந்தவன் போல் கூச்சலிடுகிறான்) ஐயோ! ஐயோ! நான் செத்தேன் 'அழுது செத்தேன்' (அழுது கொண்டே சுற்றுமுற்றும் பார்க்கிறான்) நீ யார் என்னை அடிக்கிறே? துஷ்ட பசங்களா! நான் யார் தெரியுமா? கடோத்கஜன். வீமசேனனுக்கு மருமகன் போல நான் ஒருத்தனுக்கு மருமகனில்லையா? கேளுங்க! ஒரு ஆயிரம் பிசாசு கையிலே எச்ச துப்பிகிட்டு என் வயிற்றிலே சவாரி செய்து கிட்டு ஆயிரம் பாம்பும் புலியும் என் வாயிலிருந்து நான்

துப்புறேன். ஐயோ! என்ன தெந்தரவு? பொறுத்துகணும்; பொறுத்துகணும். சிறுகனைவான்களே! இந்த கறித்துண்டுக்காக என்னைத் தொந்தரவு செய்யாதிங்க. (நீதி மன்றத்திற்குப் போகிறவர்கள் அவ்வழி வருகிறார்கள். அவர்களைக் கண்டு) அதோ! என் ஐயன்! சூரநந்தி யிருக்கிறான். நான் அவன் கிட்ட போறேன் (ஓடுகிறான்.)

பாசு:—அதோ பாருங்கள்! அந்த பித்தன் இப்பக்கம் ஓடி வருகிறான். அதோ வந்து விட்டான். கந்தலையுங் கிழிசலையும் கட்டிக் கொண்டு தலை பரட்டையா சாம்பலில் புரண்டு உடலில் புழுதி படர, எருக்கமாலை கழுத்திற் புரள, காக்கைக் கூட்டம் புடை சூழ எச்சிலைப் பொறுக்கி யுண்டு குப்பமேடே நடந்து வந்தது போல் வருகிறான் பாருங்கள்.

பித்த:—நான் அவர்கிட்ட போறேன். (பாசுபதனை சமீபித்து) ஐயா! இந்த ஓட்டை வாங்கிகிட்டு பொறுத்தருளண்ணு. இதை நான் ஒரு பறையனோடே கண்ணியமான நாய்கிட்டயிருந்து பிடுங்கிட்டு வந்தேன்.

பாசு:—(பக்கத்திலிருப்போரை ஒரு பார்வை பார்த்து) இதைத் தக்க மனிதரைப் பார்த்து கொடு.

பித்த:—உயர்குல பிராமணனே! இதை வாங்கிகணு.

கபா:—இந்தப் பாசுபதன் தான் இதைப் பெற்றுக் கொள்ளத் தகுந்தவன்.

பித்த:—(காபலியை அணுகிக் கபாலத்தைத் தரையில் வைத்து அவனை வலம் வந்து அவன் காலில் விழுந்து) பெரிய சாமி! இதை வாங்கிகணு. உங்களைக் கும்பிடுகிறேன்.

கபா:—நம் கபாலம்.

தேவ:—ஆமாம்.

கபா:—நம் சிவனருளால் நான் மீண்டும் கபாலியானேன் (அதை எடுக்கப் போகிறான்.)

பித்த:—க்ஷத்தியார் மகனே! விஷத்தைச் சாப்பிடேன்! (கபாலத்தைப் பிடுங்கிக்கொண்டு போகிறான்.)

கபா:—(அவனைப் பின் தொடர்ந்து) இந்த காலதூதன் என் உயிரைப் பிடித்துக்கொண்டு போகிறான்! ஐயா! பெரியோரே! துணை செய்யவேண்டும்!

பாசு:—நாங்கள் உமக்கு உதவி செய்வோம் (பித்தன் வழியை எல்லோரும் மறைக்கிறார்கள் )

கபா:—ஏ! நில்! நில்!



பித்த:—ஏன் என் வழியை மறைக்குறாங்கோ?

கபா:—என் கபாலத்தைக் கொடுத்து விட்டுப்போ.

பித்த:—அடே மண்டு! கபாலமா! இது பொன் கிண்ணமல்லவா?

கபா:—அது பொன் கிண்ணமென்றால் அதைச் செய்தது யார்?

பித்த:—ஐயா! சொல்றேன். தட்டான் செய்தது. அந்த பொன்போல துணிகட்டிகிட்டு இருக்கிற மனுஷன்தான் இந்தப் பொன் கிண்ணத்தைச் செய்தது.

புத்த:—என்ன சொல்கிறாய்?

பித்த:—இது ஒரு பொன் கிண்ணம்.

புத்த:—இவன் பித்தனா? இவனுக்கும் பயித்தியமா?

பித்த:—பயித்தியம்! பயித்தியம்! என்று சும்மா சும்மா என் காதில் கேக்குது. இதை எடுத்துக்கிட்டு பயித்திக்காரனைக் காட்டு (கபாலியிடம் கபாலத்தைத் தருகிறான்.)

கபா:—(அதை எடுத்துக்கொண்டு) அதா! அந்த மதிலின் பின்னால் அவன் ஒளித்துக் கொண்டு இருக்கின்றான் ஓடு.

பித்த:—நான் உங்களுக்கு நமஸ்காரம். (போய்விடுகிறான்.)

புத்த:—என்ன அதிசயம்! என் எதிரியின் அதிர்ஷ்டத்திற்கு நான் பெரிதும் ஆனந்திக்கிறேன்.

கபா:—(கபாலத்தை மார்போடு இறுகத் தழுவி) இந்நாளாக துறவறத்தினின்றும் எட்டுணையும் பிசகாது வாழ்ந்து வந்தேன். என் இறைவன் சிவனுக்கே தொண்டு செய்தேன். ஏ! என் அருமைக் கபாலமே, உன்னைக் கண்ட மாத்திரத்தில் என் துறவும் பறந்தது; என் இறைவனும் சிவனும் மறைந்தான். எல்லாம் என் ஆனந்தத்திற்கே.

சிவனடி தொண்டே யாற்றிச் சிதைவிலா துறவு பூண்டேன்
தவநெறி உறைந்தேன் நின்றன் தனை எதிர்கண்டகாலை
அவமதாய் மறைந்த தந்தோ! அவையெலாம் கணத்தேஎன்னில்
கவர்திறக்கபாலமே! நின்றனக்கு இணைகழறலாமோ?

தேவ:—ஐயா! உங்களையும் உங்க கையிலே யிருக்கிற கபாலத்தையும் பாத்தா அந்திவானத்திலே சந்திரன் கிளம்பினது போலிருக்கு. காக்ஷியைக் கண்டு என் கண் குளிருது.

பாசு:—ஐயா! உங்கள் அதிர்ஷ்டத்தைப் பார்க்க எனக்கு மெத்த திருப்தி.

கபா:—ஐயா! திண்ணமாக இந்தச் சந்தோஷம் உங்களையும் சார்ந்ததே.

பாசு:—தனக்குள் 'நல்லவன் எதற்கும் அஞ்சவேண்டுவ தில்லை' என்பது உண்மைதான். அதற்கு இந்த புத்த பிக்ஷு இன்று இப்புலிவாயினின்று மீண்டதே தகுந்த சான்று. (வெளிப் படையாக) இப்பொழுது என் நண்பனே! ஆனந்தத்தைக் கண்டு ஆனந்தித்தேன். இனிமேல் நம் இறைவனை சுடலை யாடியின் தூமகாலத்தை எதிர் பார்ப்போம். நீங்கள் இருவரும் பகை ஒழிந்து கிராதனனை சிவனும் அருச்சுனனும்போல் தோழமை கொண்டிருப்பீர்களாக. (பாசுபதன் போய்விடுகிறான்)

கபா:—நாகசேனரே! இப்படி வாரும். நான் உமக்கேதும் பிழை செய்திருந்தால் மன்னிக்கவேண்டும்.

புத்த:—இதற்கு வேண்டுகோள் ஏதற்கு? என்றால் உமக்கு ஆகவேண்டுவது ஏதாவது இருப்பின் சொல்லும்.

கபா:—நீர் என்னை மன்னிப்பதைவிட எனக்கு வேறு என்ன வேண்டும்?

புத்த:—நான் போய்வருகிறேன்.

கபா:—போய்வாருங்கள் ஐயா. மறுபடியும் தங்களைச் சந்திக்கவேண்டும்.

புத்த:—அப்படியே. (போகிறான்)

கபா:—என் கண்ணே! தேவசோமா! நாம் போவோம் வா

### பரதவாக்கியம்

மன்னுயிர் செழித்திட, மாமறை வேள்வியின்
துன்னிய ஆகுதி சூழ்ந் தெழுந்திடுக!
ஆன்பால் பெருகுக! அந்தணர் ஓதுக!
வான்பால் மதிகதிர் வழக்குறு மளவும்
நீதியும் கடமையும் நிலவுவ தாகுக!
உலகெலாம் துன்ப மொருவி யதாகி,
இலகிய வின்பம் இசையொடு மெய்த
சத்துரு மல்லன் தனியர சாட்சி
நித்தியமாக நிலவுக! அரச
பத்தியும் பெருகிப் பரவுக வினிதே!

முற்றும்

---

## வரலாற்றுப் பகுதி : History & Biography

# இத்தாலிய தேயப் பழங்குடிகள்

[பருத்தித்துறை திரு. த. இராமநாத பிள்ளை, B A, (Lond.)]

மேலைத் தேயங்களுள் மத்தித்தரைக்கடற் பக்கங்களிலுள்ள நாடுகளே நாகரிக மடைந்து சிறப்புற் றோங்கியவை என்பது பண்டைய வரலாற்று வல்லோர் யாவருக்கும் ஒப்ப முடிந்த கொள்கை. எகிப்தியர், பினீசியர், யவனர் என்போர் முசிறி, காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைகளில் இறங்கித் தமிழ் நாட்டாரோடு வாணிகஞ் செய்து தமிழருடைய நாகரிகத்தையும், கல்வி முறைகளையும், தெய்வ வழிபாடுகளையும், பழக்க வழக்கங்களையும் மேலைத் தேயத்திற்குக் கொண்டுசென்றனர் என்பதை மேற்கூறியோரின் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் வழங்குகின்றமையாலும், தமிழ் நூற்கள் அவர்களைப் பற்றிக் கூறுகின்றமையாலும் கருதலாம். இனி எகிப்தியர், பினீசியர், யவனர், எற்றூரியர், காதாக்கினியர் முதலியோரின் பண்டை நாகரிகங்களின் பயனைத் துய்த்தற்கு எழுந்த மக்கட் கூட்டத்தினர் உரோமரென வரலாற்றாசிரியர்கள் கூறுநிற்கின்றனர். இத்தாலியா தேயத்தைக் காடுகெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கியோர் உரோமரே.

உரோமருடைய நாணயங்கள் தமிழ்நாட்டுப் பழைய ஊர்களில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றமையால் உரோமர் பண்டைக் காலத்தில் தமிழரொடு வணிகஞ் செய்தனர் என்பதற்கு ஐயமில்லை. உரோம வரலாற்றாசிரியருள் ஒருவராகிய பிளினி (Pliny) கீழைத் தேயத்துப் பொருள்களை உரோமர் வாங்குவதனால் ஆண்டுதோறும் பல கோடி பொன் செலவாகின்றதெனக் கவலைப் பட்டனர். இது நிற்க, உரோமர் தம் வலியால் பிறதேயத்தாரை அடக்கி அவர்களின் நாகரிகத்தைத் தழுவியும், தம் நாகரிகத்தைப் பரப்பியும் ஆண்டனர். ஆங்கிலேயர் உரோமரது நாகரிகத்தையும், அரசியல் முறைகளையும் கையாளுகின்றனர். ஆகையால் உரோமர் வரலாற்றைத் தமிழர் கற்றல் பயனுடைத்தாகும்.

மத்தித்தரைக் கடலைத் தெற்கெல்லையாக உடைய மூன்று ஐரோப்பிய குடா நாடுகளுள் நடுவணது இத்தாலியாக் குடா நாடாகலான் உரோமர் யவன குடா நாட்டாரோடும் மற்றைய குடா நாட்டாரோடும் இலகுவாய்ப் பண்டமாற்றுச் செய்து அவர்களுடைய பயிற்சி நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் கற்றுத் தமது நாகரிகத்தை வளர்த்தனர். இத்தாலியா தேயத்திற்கு மேற்

கெல்லையாகிய கடலை தைறீனியன்கடலென்றும், கிழக்கெல்லையாகிய கடலை அத்திரியாட்டிக் கடலென்றும் உரோமர் வழங்கினர். குடக்கும், குணக்கும், தெற்கும் கடலை எல்லையாகவும், வடக்கில் அல்ப்பைன் மலைத்தொடரை எல்லையாகவும் உள்ள தேயம் இத்தாலியாக் குடா நாடெனப்படும். இத்தாலிய தேசத்தின் கீழ் கரை மலையும் மலை சார்ந்த இடமுமாகலின் குறிஞ்சி நாடாயிற்று. அம் மலைகளை அப்பினைன் மலைத்தொடரெனக் கூறுப. அப்பினைன் மலைச் சிமையங்கள் ஏழாயிரம் அடி உயரமானவை. அம் மலைக்கு மேற்குள்ள நாடு சமபூமி. அச் சம பூமியில் கம்பேனியா, எற்றூரியா என்னும் மருத நிலங்களையுடைய நாடுகள் பல வுள. வடக்கின்கண்ணுள்ள அல்ப்பைன் மலை இத்தாலியாவிற்கு ஓர் இயற்கை யரணாக இருந்தது. அல்ப்பைனுக்கு மேலைப் பக்கத்திலுள்ள தேயம் கல்லிய தேயம். கீழைப் பக்கத்துச் சம பூமி இத்தாலிய கல்லிய நாடென வழங்கப்பட்டது. கீழ்ப் பக்கத்துக் கல்லிய நாடு போநதியைத் தெற்கெல்லையாக உடையது. இப் போநதி அல்ப்பைன் மலையில் உற்பத்தியாகி இலம்பாடிச் சம பூமியிற் பாய்ந்து அத்திரியாட்டிக் கடலொடு கலக்கும் சங்கமத் துறையில், உரோமருடைய இராச்சியம் அழிந்தபின்னர் வெனிஸ் நகரம் அமைக்கப் பெற்றது. இவ் வெனிஸ் நகரம் ஒரு குடியரசாகி வியாபாரத்தாற் செல்வமுற்றிருந்து பதினைன்காம் நூற்றாண்டில் ஓட்டொமான் துருக்கரை இத்தாலியா தேயத்துட் புகவிடாது தடுத்தது. வெனிஸ் வரலாற்றைச் செப்புதல் பிறிதொன்று மொழிதலாகும்.

அல்ப்பைன் கணவாய் வழி உட்புகுந்த ஆரியர் மலைப் பாகங்களில் வசித்தனர். எற்றூரிய சம பூமியில் வாழ்ந்த மக்கள் நாகரிமுடைய நன்மக்களாயினர். எற்றூரியர் கமத் தொழிலை விருத்தி செய்து, நாடு நகரங்களை அமைத்துச் சிறப்புற்றோங்கினராக, வடவித்தாலியாவில் நுழைந்த ஆரியர் அலைந்து திரியும் இடையராய்த் தம் பட்டிகளையே மேய்த்தனர். ஆரியர் கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் இத்தாலியா நாடு புக்கனரென ஆசிரியர்கள் கூறுப. ஆரியர்கள் வட இத்தாலியாக் குகைகளிலும் குன்றுகளிலும் வசித்த புலையரை வேற்றுப் புலங்களுக்குக் கலைத்தனர். அப்புலையர் மனிதருடைய ஊனைத்தினனும் ஒரு மூர்க்கசாதியாரென அறியக்கிடக்கிறது. அப்புலையர் பெலாஸ்கியர் எனப்படுவர். அப்பெலாஸ்கியராற் கலைபட்டோர் தென்னித்தாலியாவில் வசித்தனர். அவர்கள் சிக்கூலியர் எனப் பெயர் பெற்றூர்கள். கி. மு. ஈராயிரம் முதல் கி. மு. 1000-ம் ஈறூன காலத்தில் இத்தாலியா நாட்டிற் குடியேறிய ஆரியர் உம்பிரியரென அழைக்கப்பட்டனர். உம்பிரியருடைய உடை, தோல்; ஆயுதம் கல், கோல் முதலியன; தொழில் நிரைமேய்த்



தல். இக்காலங்களில் அவர்கள் வெண்கலம் இரும்பு முதலியவற்றூல் கலங்களும் ஆயுதங்களும் ஆக்க, யவனர் முதலிய கீழைத் தேயத்தாரிடம் பழகினுரெனத் தெரிகிறது. உம்பிரியரை எற்றூரியர் நெருக்க, எற்றூரியரை கல்லியர் நெருக்க யாவரும் தென் இத்தாலியாவை நோக்கினர். இந்த எற்றூறியரை ஆரியரோ அல்லரோ எனத் துணியமுடியாமல் இருக்கிறது. எற்றூரியர் தம்மைத் தம் மொழியில் இராசினியர் என வழங்கினர். அவர்கள் சின்னுசியாவிலுள்ள ரிரா (திரா) என்னும் நகரத்தினின்றும் போந்தனர் என்பது பாரம்பரியம். திரா நாட்டினின்றும் வந்தமையால் யவனர் அவர்களைத் திரானியர் என அழைத்தனர் போலும். எற்றூரியர் கமத் தொழில் செய்தும், சமயக் கிரியை நூல்களை ஓதியும், நிமித்த நூல்கள் கற்றும் அரசியலை நடாத்தினர். எற்றூரியருடைய கிரியை நூல்களுக்கும் நிமித்த நூல்களுக்கும் உரோமரும் அமைந்து ஒழுகினுர்கள் என நன்கு புலப்படுகின்றது. விழாக்காலங்களில் எற்றூரியர் காட்டிய வாட்போர்க் காட்சிகளை உரோமரும் விழைந்து அக் காட்சிகளில் தாமும் இன்புற்றனர். கி. மு. 500-ம் ஆண்டளவில் எத்திசையும் பகைவர் எழுந்தமையால் எற்றூரியர் வலி குன்றினர். இலத்தினரும், உரோமரும், கல்லியரும், உம்பிரியரும், சம்நிதியரும் பலதிக்காலும் நெருக்க, எற்றூரியருடைய இராச்சியம் நிலைகுலைந்தது.




இத்தாலியா தேயத்துப் பதியெழுவறியாப் பழங்குடிகள் உம்பிரியர், ஓஸ்கோசபேலியர், இலத்தினர் என மூவகுப்பினர். ஓஸ்கோசபேலியருடைய ஒரு கிளை சபீனியர். ஓஸ்கர் சனத்தொகை மிகுங்காலத்தில் பிறக்கும் குழந்தைகளையும் குட்டிகளையும் கொல்லுதல் வழக்கம். இருபதாம் ஆண்டெய்திய இளைஞர்களைப் புதிய இல்லங்களைத் தேடும்படி தம் ஊரினின்றும் அகற்று

வர். ஒஸ்கோ சபேலியர் ஆக்ருவியர், கேணிக்கியர் மார்சியர் எனப் பல்கினர். சம்நிநியர் உம்பிரிய இனத்தைச் சேர்ந்தவரே. சம்நிநியர் பெருகிக் கம்பேனியா நாடுளைக் கடந்து, தென்னித்தாலியாவில் வதிந்து லுக்கேனியர் எனப்பெயர் பெற்றனர். இனி இலத்தினரும் சபீனியரும் உரோமரும் ஒரு கூட்டத்தினரே.

கி. மு. 800-ம் ஆண்டு யவனர் கிரேக்க நாட்டினின்றும் பெயர்ந்து கம்பேனியா நாட்டில் குடியேறிக் கூமாயிநகரை அமைத்தனர். கி. மு. 743-ல் இரேசிய நகரையும், 710-ல் குரோரோனு நகரையும், 600-ல் சிபாரிரிஸ் நகரையும் நிறுவினார்கள் கி. மு. 400-ல கல்லியரும் வடபால் வந்திறங்கி போநதிக் கரையில் தங்கினார்கள். உரோமர் கி. மு. 753-ம் ஆண்டில் உரோமாபுரத்தை அமைத்தனரெனப் பழங்கதைகள் கூறுகின்றன.

---

# புதுக் கவிகள் - Original Poetry

## திருஞானசம்பந்தர் நாமாவளி

[திரு மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள்]

நற்றமிழ் மூன்றிலும் நாவலனே, ஞான மணங்கமழ் பாவலனே.
பால்மண மாறுப் பாலகனே, பாவலர்க் கெல்லாம் மேலவனே.
அருமறைக் கதவை அடைத்தவனே, அருளா ரமுதம் படைத்தவனே.
ஆண்பனை பெண்பனை யாக்கியவா, அவள்துயர் மருகலிற் போக்கியவா.
கன்னியென் றெலும்பைக் கண்டவனே, கபாலியை மயிலையிற் கொண்
[டவனே.
சோதியில் உயிர்களைச் சேர்த்தவனே, தூய விழியாற் பார்த்தவனே.
பருவம் மூன்றினிற் பாலுண்டாய், பரமன் அன்பினில் மாலுண்டாய்.
பசுபதி யருளைப் பருகியவா, பாசம் நீங்கியுள் ளுருகியவா.
கனியே யுனக்கிணை கண்டதிலை கருதி யெவரும் விண்டதிலை.
உன்னைப் பாடார் ஒளிகூடார், உன்பதஞ் சூடார் வினை வீடார்.
சம்பந்தன் திருவடி எம்பந்தம், வெம்பந்தம் போக்குஞ் சம்பந்தம்.
ஆண்டரு ளெம்மை அற்புதனே, அணிந்தனம் நின்னரும் பொற்பதமே.
செந்தமிழ்த் தேன்மொழி செழுங்காவே, சேர்ந்தோர் மனமென்றும்
[அழுங்காவே.
இசைத் தமிழ்க் குயிராம் இலக்கணமே, இயற்றமிழ்க் கிருப்பாம்
[புலக்கணமே.
பாடுதும் பாடுதும் பாவையரே, பாலரு வாயனை ஆவியரே.
நவிலுதும் வாரீர் நமரங்காள் ஞானசம் பந்தனே தமரங்காண்.
முத்தமிழ்ப் புலமையின் முதியவனே முதிர்தரு சுவையிற் புதியவனே.
காழியன் புகழிற் களிப்போமே, கலந்திடு பசுபாச மளிப்போமே.




## கடைச் சரக்குகளைப் பயன் படுத்தும் முறை

"காசிகன்" எழுதுவது

### மிளகு (Pepper)

மிளகு என்றது நல்ல மிளகென்று சொல்லப்படுங் கரிமிளகையேயாம். புது மிளகாகவும் செம்மையானதாகவுமிருப்பவை மருந்துக்குப் பற்பலவகைகளிற் பயன்படும்.

சீதசுரம் பாண்டு சிலேஷ்மங் கிராணி குன்மம்
வாத மருசிபித்த மாமூல - மோதுசந்நி
யாசம பஸ்மார மடன்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி னால்.

கோணுகின்ற பக்கவலி குய்யரோகம் வாத
சோணிதங் கழுத்திற்குட் டோன்றுநோய் - காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தமென்றீ
ரேதுநோய் காயிருக்கி லீங்கு.

என்பன பதார்த்த குண சிந்தாமணிச் செய்யுட்கள்

1. நல்ல மிளகு, பெருங்காயம், அபின் ஆகிய இவற்றில் வகைக்கு 20 கிறெயின் எடுத்து ஒன்றாகச் சேர இடித்துப் பன்னிரண்டு மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, அரை அல்லது ஒரு மணிநேரத்திற் கொரு முறை காலரா என்ற வாந்திபேதி கண்டவர்களுக்குக் கொடுத்து வந்தால், நோய் தீரும். இது வங்காளத்தில் பயன்படுத்தப்பட்டுப் பலனுளதென வறிந்ததோர் முறையாகும். இம்மாத்திரையை யுண்ணும் நோயாளி வேண்டிய அளவிற்குத் தண்ணீர் அல்லது கஞ்சி நீரைக் குடிக்கலாம். இந்த அளவு, வயதுவந்த ஆடவர்கள் மகளிர்க்காகும். இதிற் பாதியளவே ஏழு முதல் பதினான்கு வயது வரையுள்ள சிறுவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

2. நல்ல மிளகு 40 கிறெயின், காயம் 20 கிறெயின், கழற்சிக்காய்ப்பருப்பு 100 கிறெயின், எடுத்துத் தேனைவிட்டு ஒன்றாயிடித்து 30 மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு, குளிர் காய்ச்சல் அல்லது முறைக் காய்ச்சல் கண்டவர்களுக்குக் காய்ச்சல் விட்டிருக்கிறபொழுது நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று வேளை இரண்டிரண்டு மாத்திரையாகக் கொடுத்துவர, நோய் நீங்கும். இது பெரியவர்களுக்குரிய அளவு. குழந்தைகளுக்கு இதிற்பாதியளவே கொடுத்தல் வேண்டும். இம்மாத்திரைகளை யுண்பதற்குமுன் பேதிக்குச் சாப்பிட்டு வயிற்றைத் துப்புரவாக்கிக் கொள்ளல் நலமாகும்.

3. நல்ல மிளகின் தூள் ஒரு அவுன்ஸ், நெய் 4 அவுன்ஸ் ஆகிய இரண்டையும் நன்றாக அரைத்து, நாடோறும் இருமுறை, 'டர்தாமரையுள்ளவர்கள் அதன் மீது தேய்த்து வந்தால், அது ீங்கும்.

4. வால்மிளகு, அது இல்லாவிட்டால் நல்லமிளகு, பத்து கிறெயின் எடுத்துத் தேனில் அரைத்து ஒரு வேளையாகச் சாப்பிட வேண்டும்; இவ்வாறு ஒரு நாளைக்கு மூன்று வேளை உண்டால் மேக வெள்ளை நீங்கும். இந்நோய்க்கு நல்ல மிளகினும் வால்மிளகே சிறந்ததாம்.

---

## முயிறு முட்டைத் தைலம்

அரைப்படி வேப்பெண்ணெயில், சங்கிலைச் சாறு முக்காற்படியும், பாவட்டையிலைச்சாறு முக்காற்படியும் முயிறு முட்டை முக்காற்படியுஞ் சேர்த்துக் கொள்ளவேண்டும். பின், சுக்கு, திப்பிலி, வசம்பு, பூண்டு, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் ஆகிய இவற்றில் வகைக்கு ஒரு வராகன் எடை எடுத்துப் பொடித்து மேற்குறித்த எண்ணெயிற் போட்டு அடுப்பிலேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி வடிகட்டி எடுத்து ஒரு துட்டு எடை வீதம் கொடுக்க சன்னிசுரம், கபம், மாந்தம், முதலிய நீங்கும்.

—(வைத்திய ராஜரத்தின சிந்தாமணி.)

---

# மகளிர் பகுதி

## இந்திய மகளிர் உடை

[இலக்குமணபுரி இஸபெல்லா தபோர்ன் கல்லூரியில் கல்வித்துறைத் தலைவர் திரு ஏ. எச். மெஅக்கென்ஃஸி என்பார் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதி]

* * * முடிக்குமுன், பெண்களுக்கு ஒன்று சொல்லவிருப்புகிறேன். ஆணாகப் பிறந்த யான் அதைப்பற்றிக் கூறப்புகுந்தது பெருந் துணிவே யாகும். நான் மகளிரணியும் உடையைப் பற்றிப் பேசப் போகிறேன். இந்திய மகளிர் உடுத்தும் புடவைகள் எனக்கு வியப்பையே அளிக்கின்றன. நாட்டின் பல பகுதிகளிலும் பற்பல விதமாக இப்புடவைகள் மகளிரால் அணியப்படுகின்றன. சிலர் தலைமேல் முக்காடிட்டு அணிகின்றனர்; சிலர் வலது தோளின் மீது "மாராப்பு" போட்டுக்கொள்கின்றனர்; சிலர் இடது தோளின் மீது போட்டுக் கொள்கின்றனர்; சிலரோ இருதோள்களின் மீதும் வரும்படியாக அணிகின்றனர். சிலர் தட்டுச் சுற்றாக அணிகின்றனர்; சிலர் "மடிசா"ரிட்டு அணிகின்றனர். புடவைகளின் நிறங்களோ வானவில்லின் பலபடித்தான நிறங்களையும் பூக்களின் பல நிறங்களையும் தோற்கடிக்கின்றன என்றே கூறலாம். இவ்வளவு வேறுபாட்டிற்கு மிடையே தனிப்பட்ட ஒரு ஒருமைப்பாடு காணப்படுகிறது. அஃதென்ன வென்றால், இந்திய மகளிர் தம் உடைகளை எவ்வாறு அணியினும், எப்புறம் அணியினும் மிகவும் எழிலுற அணிகின்றார்கள் என்பதே. வயலில் வேலை செய்யும் உழத்தியரணியினும் வளமனை வதியும் அரசியரணியினும் புடவை யுடை இந்திய மகளிரின் எழில் நலத்தையும் இனிமைப் பண்பையும் நன்கெடுத்துக் காட்டுவதற் கெனவே அமைந்தது போலும்!

இந்திய மகளிர்க்கு மேனாட்டுக் கல்வி முறை வேண்டற்பாலதுதான். அஃது அவர்கள் கருத்தைத் திருத்தி, அறிவைப் பெருக்கி, வாழ்க்கையில் புதியதோர் குறிக்கோளை யளிப்பதென்பது உண்மையே யெனினும், அதை அப்படியே ஏற்றுப் பழக இந்திய மகளிர் விரும்பின் அது ஒரு பெருந் தவறே யாகும். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட பண்பு நலம் உண்டு. இந்திய மகளிரின் தனிப் பண்பு, கற்பும் பொறுமையும் விளங்கும், எண்ணிறந்த இந்தியக் கதைகளால் நன்கு விளங்கும். ஒப்பற்ற எழிலும் இனிமையும் அவர்தம் புடவை

யுடையில் தாமிருக்கின்றன. மேனாட்டுக் கல்வி முறை மக ளிர்க்குத் துணிவையளிக்கக்கூடிய பல பண்புகளை வளர்த்து வரக்கூடியதே; ஆயினும், இப்பண்புகள் இயற்கையாய்ப் பெண் மைக் குரியவையும் புகழ்ச்சிக்குரியவையுமான இந்திய மகளிர் தம் தனிப்பட்ட அடக்கமான பண்புகளை விரட்டியடித்து விடாமற் பாதுகாத்தல் இன்றியமையாததாகும்—கருங்கக்கூறின் புடவை யுடையைக் கைவிடவேண்டாம்.

(கா. சிவ. க.)    —இந்து.

---

# செய்திகளும் குறிப்புகளும்
# News and Notes

சென்னைக் கீழ்ப்பாக்கத்திலுள்ள ஒரு சிற்றோடையிலிருந்து ஐயாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்டனவெனக் கணிக்கக்கூடிய சில விந்தையான மட்கலங்களும் சவச்சால்களும் அகழ்ந்தெடுக் கப்பட் டிருக்கின்றன. இப்பொருள்கள் சென்னைப் பொருட் காட்சிச் சாலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

*    *    *

டையா வளவைச் சேர்ந்த பெயிந்தியா என்ற ஊர்க்கருகில் ஓராற்றங்கரையில் 31½ அடி நீளமுள்ள ஒரு மனித எலும்புக்கூடு தோண்டி யெடுக்கப்பட்டுள்ளது. அதன் கால்களின் நீளம் மட்டும் 10 அடி இருந்தன. அது இப்பொழுது இராம்கார் நிலக் கிழவரின்மாளிகையில் எடுத்து வைக்கப்பட்டுள்ளது.

*    *    *

ஆங்கிலேயர்க்கும் ஆஸ்திரேலியர்க்கும் நடைபெற்ற கோற் பந்துப் போட்டியில் ஆஸ்திரேலியர் இவ்வாண்டு தீர்ந்த வெற்றி பெற்றனர்.

*    *    *

உலகத்திலேயே மிகவும் பெரிய கல்லணை என்று கருதப் படும் மேட்டூர் அணை கட்டி முடிவு பெற்றது. அதனைக் கட்டி முடிக்க நாலே முக்காற் கோடி ரூபாக்களுக்குமேற் செலவாகி யுள்ளது. அதனைக் கட்ட ஆறு ஆண்டுகள் ஆயின. மைசூர் கிருஷ்ண ராஜசாகர அணைக்கட்டு தேக்கக்கூடிய நீர்த்தொகுதி யைப்போல் இரண்டு மடங்குக்கு அதிகமாக இவ்வணை தேக்கக் கூடும்.

*    *    *

ஈழநாட்டுக் கண்டி மன்னர்களின் அரியணையையும் திரு முடியையும் ஆங்கிலேய அரசாங்கத்தார் இவ்வாண்டு திருப்பிக் கொடுத்துவிட முடிவு செய்துள்ளனர்.

---

உ

# வாளெழுபது

## பாயிரம்

### இன்னிசை

### கைக்கோளர்

கலி விருத்தம்

வாசிவே ழங்கடந்த வாள்வீர ரெல்லாருந்
தூசிவே ழங்கடந்த சூட்டியர சாளுகினும்
பேசுகோல் கைக்கோள் பெருமையினாற் பாவோடும்
வீசுகோ லல்லோநம் வேந்தற்குச் செங்கோலே. (க)

(பொழிப்புரை) குதிரைப்படையையும் யானைப்படையை யுங் கடந்து வெற்றிகொண்ட வாளையுடைய வீரர்களெல்லோரும், முன்னிற்கும் படையையும் வெற்றிகொண்டு மகுடம் சூட்டி அரசாட்சி புரியினும், சிறப்பித்துச் சொல்லப்படும் தடியினையுடைய கைக்கோளர் சிறப்புடன் பாவில் ஓடும்படி வீசுகின்ற கோலான நூனாடாவன்றோ நம் அரசர்க்குச் செங்கோலை நிலைபெறக் கையிற் றங்கச் செய்வது!

அரசர்கள் செங்கோல் கைக்கோளர் பாவோடும் கோலால் காக் கப்படுவதெனக் கைக்கோளர் சிறப்புக் கூறியது இச்செய்யுள்.

### உழவர்

பாரரசர் பெருஞ்செல்வம் பழுதுபடு மொருகாலம்
ஏரரசர் பெருஞ்செல்வம் பழுதுபடா தெப்பொழுதுந்
தேரரசர் போர்க்களத்திற் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏரரசர் போர்க்களத்தில் இரப்பவருந் தோலாரே. (உ)

(பொ-ரை.) பூமியை ஆளுகின்ற அரசர்களது திரண்ட செல்வ மானது ஒரு காலத்தில் கெடும் தன்மையுடையது; (ஆனால்) ஏரினைக் கொண்டு உழுகின்ற உழவரசரான வேளாண் மரபினரது திரண்ட செல்வம் எக்காலத்தும் கெடுதலை யடையாது. தேர்ப்படையினை யுடைய அரசர்களிற் சிலர் போர்க்களத்திலே வெற்றி பெறுவர்; சிலர்

தோல்வி யுறுவர்; (ஆனால்) உழவரசர் போரடிக்கும் களத்திலோ யாசிப்பவரும் தோல்வி யடையார்.

அரசர் செல்வத்திற்கு அழிவு நேரிடினும் உழவர் செல்வத்திற்கு அழிவில்லை என்பது கருத்து. உழவர்கள் தங்கள் நெற்போரடிக்கும் களத்தில் இரவலர்க்கு மிகுதியும் களிப்போடு அளிப்பவராதலின் "ஏரரசர் போர்க்களத்தில் இரப்பவரும் தோலாரே" என்றார். வேளாளர் சிறப்புக் கூறியது இச்செய்யுள்.

"பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம் அழிவுபடா திருத்தலினாற்
றேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்து ளிரப்பவருந் தோலாரே."
—(ஏரெழுபது : 59)

என்னும் ஏரோழுபதுச் செய்யுளும் ஈண்டு நோக்கத் தக்கது.

### மறவர்

படிகாக்குந் தனிக்கவிகை பார்வேந்தர் தங்கண்மணி
முடிகாக்குஞ் செங்கோன்மை முறைகாக்கும் படிபாதிக்
குடிகாக்கும் வழுதிதனிக் கொடியையடல் கெருடனெடா
வடமேரிற் கயல்காக்கு மறவர்கையில் வளைதடியே. (௩)

(பொ - ரை.) பூமியைக்காக்கும் ஒப்பற்ற குடையை யுடைய பூவரசர்தங்களது இரத்தினங்களாலாக்கப்பட்ட கிரீடத்தைக் காக்கும்; செங்கோல் நெறியைக் காக்கும்; பூமியில் பாதிகாவல் முறையில் குடிகளைக் காக்கும்; வடமேரு மலையின்கண் பொறிக்கப்பட்ட பாண்டியனது கொடியின் உருவச் சினையாகிய மீனை வலிபொருந்திய கருடனெடாதிருக்கும்படி காக்கும், மறவர் கையில் விளங்கும் வளைதடி.

வளைதடி--(Boomerang) மறவர்கள் தனிச்சிறப்பிற் கையாளும் ஒரு போர்க்கருவி. அது பகைவரைத் தாக்கியபின் விடுத்தோர் கைக்கண் திரும்பவந்தடையும் தன்மையது. வளைதடி, வளரி என்றும் வழங்கப்பெறும்.

மறவர் வளைதடி, அரசர் மணி முடியையும், செங்கோலையும், மக்களையும், வடமேருவில் பாண்டியன் பொறித்த மீனக்கொடியையும் காக்கும். இச்செய்யுளால் பாண்டியர் சிறப்பும், அச்சிறப்புக்கு மறவர் ஒருவாறு துணைநிற்பதும் குறிக்கப்பட்டன.



### நாடு

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தண்டமிழ் பிறந்த நாடு தடாதகை திருக்கை நாடு
மண்டலம் பாதி செங்கோல் வழுதிபாற் பகிர்ந்த நாடு
கண்டநா டதுகொண் டட்ட கம்பநாட் டியபொன் னாடு
கொண்டநா டதுகொ டாத கோட்டைநாட் டவர்க ணாடே (௪)

(பொ - ரை.) குளிர்ச்சி பொருந்திய தமிழ்மொழி பிறந்தநாடு தடாதகைப் பிராட்டியின் அழகிய கரங்களால் காக்கப்பட்ட நாடு, பாண்டிய மண்டலத்திற் பாதியைச் செந்நெறி பற்றி நடாத்தும் செங்கோலினையுடைய பாண்டியனிடத்திற் பங்கிட்டுக் கொண்ட நாடு; அவ்வாறு பெற்ற நாட்டைக் கொண்டு தம் சிறப்புத் தோன்ற எண் கம்பம் நாட்டிய அழகியநாடு ஆகும், பகைவரிட மிருந்து கைக்கொண்ட நாட்டை மீண்டும் கொடாத ஐங்கோட்டை நாட்டவர்களதான மறவர்கள் நாடு.

தமிழுக்குப் பிறந்தகம் பாண்டி நாடாதலினாலும், அகத்தியர் அமர்ந்து தமிழ்மொழி பெருக்கிய பொதியிலைத் தன்பாலுடைமையாலும், ஐங்கோட்டை நாட்டவர்கள் நாட்டைத், 'தண்டமிழ் பிறந்த நாடு,' என்றார். பார்வதி, மலையத்துவசன் மகளாய்த் தோன்றி ஆட்சி புரிந்த நாடாதலின் "தடாதகை திருக்கைநாடு" என்றார். 'கன்னித் தமிழ்நாடு' என்றதும் அதுநோக்கியே யாம். ஐங்கோட்டை நாட்டு மறவர்கள் சிறப்பால் பாண்டியன்பால் பாதி நாட்டைப் பெற்றனர் என்பது விளங்க, 'மண்டலம் பாதி செங்கோல் வழுதிபாற் பகிர்ந்தநாடு' என்றார். 'அட்டகம்பம் நாட்டிய பொன்னாடு' என்பது மறவர்கள் தம் சிறப்பு என்றும் நின்றுநிலவுதல் வேண்டிப் புகழைப் பொறித்துத் தம்பங்கள் நாட்டியதைக் குறித்தது. கொண்டநாடு அது கொடாத தன்மையால் அவர்கள் சிறப்பும் வலிமையும் விளக்கப்பட்டன.

### நூற்பெயரும் ஆசிரியர்பெயரும்

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

காராளர் பெருமையெல்லாங் கவியி னோர்ந்து
கம்பனே ரெழுபதுபண் கவியிற் சொன்னான்
ஏரார்கைக் கோள்மரபை யொட்டக் கூத்தன்
ஈட்டி யெழுபதுபாட் டிசையிற் சொன்னான்

பேரான வைந்துவளக் கோட்டையர்தங் கொற்றப்
　　பெருமையுமங் கலச்செயலும் பிடித்த வாளும்
பேராரும் புயவலியு மறுவில் தன்ம
　　புத்திரன்வா ளெழுபதினிற் புகல்செய் தானே. (ரு)

(பொ - ரை.) வேளாளர்களின் பெருமைகளை எல்லாம் கவியாலு ராய்ந்து கம்பன் எனும் புலவன் இசையோடு பொருந்திய எழுபது கவிகளாற் கூறினன். விளங்குகின்ற கைக்கோளர் குலச்சிறப்பை ஒட்டக்கூத்தன் என்னும் புலவன், 'ஈட்டியெழுபது' என்னும் பெயரால் கவியிற் செய்தான்; பெருமைபெற்ற ஐந்துவளக் கோட்டை நாட்டு மறவர்களின் வெற்றிப் பெருமையையும், மங்கலச் செயல்களையும் அவர்கள் கையில் தாங்கும் வாளின் சிறப்பையும், அவர்களது கீர்த்தி நிறைந்த புயவலிமையையும், குற்றமில்லாத தன்ம புத்திரன் என் போன் 'வாளெழுபது' என்னும் பெயராற் கவியிற் கூறினன்.

**கம்பன் பாடியது ஏரெழுபது** :—வேளாளர் சிறப்பைக் கூறுவது.

**ஒட்டக்கூத்தன் பாடியது ஈட்டியெழுபது** :—கைக்கோளர் சிறப் பைக் கூறுவது.

**தன்மபுத்திரன் பாடியது வாளெழுபது** :—மறவர் சிறப்பைக் கூறுவது.

ஏரெழுபது, ஈட்டியெழுபது என்பனவற்றை இதனோடு சேர்த்துக் கூறுதலின் இதனையும் அதனோடு வைத்து எண்ணத்தக்கதாகும் என்பதைக்குறித்தலால் நூற்பெருமையும் ஆசிரியர் பெருமையம் விளக்கிய வாறுயிற்று.

பாயிரம் முற்றும்.

199650
சென்னை